www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மே 2010
ரூ. 7.00



தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்:

## பசியைப் போக்குமா? பட்டினியில் தள்ளுமா?

படிப்பகம்

www.padippakam.com



# “மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டங்களைத் தீவிரப்படுத்துவோம்!”

**–மாநில அமைப்புக் கமிட்டி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்)–இன் எட்டாவது பிளீனச் சூளுரை.**

மாநில அமைப்புக் கமிட்டி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)-இன் 8-ஆவது பிளீனம், தோழர் லெனினின் பிறந்த நாளும், இ.பொ.க (மா-லெ)-இன் நிறுவன நாளுமான ஏப்ரல் 22-ஆம் தேதியன்று தொடங்கி, ஏப்ரல் 26-ஆம் தேதியன்று முடிவடைந்தது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள கட்சி அமைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்தப் பிளீனத்தில் கலந்து கொண்டனர். உலகளவிலும் இந்திய அளவிலும் மக்கள் விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி, நிகழ்ச்சிகள் துவங்கின. சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் அரசியல் - பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்தும், கட்சியின் செயல்பாடுகளில் காணப்படும் குறை-நிறைகள் குறித்தும் பிளீனம் விரிவாகவும் ஆழமாகவும் விவாதித்தது.

உலகெங்கும் திணிக்கப்பட்டுவரும் தனியார்மய, தாராளமய, உலகமயக் கொள்கைகளின் விளைவாக உண்மைப் பொருளாதாரத்தின் மீது நிதிமூலதனக் கும்பலின் ஆதிக்கம் மென்மேலும் அதிகரித்தல், சப் பிரைம் குமிழி வெடிப்பு, பங்குச் சந்தைகளின் உலகு தழுவிய வீழ்ச்சி, வங்கிகள் திவால், நீடிக்கும் பொருளாதாரத் தேக்கம், உலகெங்கும் மக்களுடைய வரிப்பணத்தைக் கொட்டியழுது முதலாளி வர்க்கமும், நிதி மூலதனக் கும்பலும் கைதூக்கி விடப்படுதல், இதற்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகளில் எழுகின்ற மக்கள் போராட்டங்கள், இறங்கு முகத்தில் தடுமாறும் அமெரிக்க மேல்நிலை வல்லரசு, அதன் இரத்த வெறியை நிரூபிக்கின்ற இராக் ஆக்கிரமிப்புப் போர் - ஆகியவற்றின் ஊடாக வெளிப்பட்டு வரும் ஏகாதிபத்தியங்களின் நெருக்கடி, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இதுவரை கண்டிராத அளவுக்கு ஆழமாகியும் பரவலாகியும் இருப்பதையும், மீள முடியாத கட்டமைப்பு நெருக்கடியாக உலக முதலாளித்துவத்தை அச்சுறுத்துவதையும் பிளீனம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது.

கம்யூனிசத்தின் உலகு தழுவிய எழுச்சி மற்றும் காலனி நாடுகளில் மூண்டெழுந்த தேச விடுதலைப் போர்கள் ஆகியவற்றை எதிர்கொள்ள முடியாமல் நவகாலனியம் எனும் மறைமுகக் காலனியாதிக்க வடிவத்திற்கு மாறிக்கொண்ட ஏகாதிபத்தியம், மேல்நிலை வல்லரசுகளின் தோற்றத்துக்குப் பின் தற்போது உற்பத்தி, உழைப்பு, சந்தை, மூலதனம் ஆகிய அனைத்தும் உலகமயமாக்கப்பட்டிருக்கும் சூழலில், ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கு எதிராக மறுகாலனியாக்கம் எனும் தாக்குதல் செயல்தந்திரத்தை அமெரிக்காவின் ஒற்றைத்துருவ மேலாதிக்கத்தின் கீழ் அமல்படுத்துவதை பிளீனம் சுட்டிக்காட்டியது. நெருக்கடிகள் தீவிரமடைந்திருந்த போதிலும், ஏகாதிபத்திய உலகக் கட்டமைவு நொறுங்கி விழும் நிலையில் இருப்பதாக மதிப்பிடுவதும், போர்கள் இல்லாத பல்துருவ சமநிலையை எட்டிவிட்டதாகக் கருதுவதும் தவறானது என்பதை பிளீனம் வலியுறுத்தியது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், ரசியா ஆகிய மேல்நிலை வல்லரசுகளுடைய அரசியல், பொருளாதார, இராணுவ வலிமைகளையும், அவற்றில் தோன்றியிருக்கும் ஏற்றத்தாழ்வுகளையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பிளீனம், மேல்நிலை வல்லரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் அரசியல், பொருளாதார, இராணுவ அரங்குகளில் தீவிரமடைந்து வருவதை, குறிப்பாக ரசிய-சீனக் கூட்டணி அமெரிக்காவின் டாலர் மேலாதிக்கத்தை கேள்விக்குள்ளாக்குவதையும், புதிய அணிசேர்க்கைகளின் கீழ் முரண்பாடுகள் வெடிப்பதற்கான சூழலையும் சுட்டிக்காட்டிய பிளினம், லெனினிச சகாப்தமே தொடர்கிறது என்பதைப் பருண்மையான ஆய்வுகளின் ஊடாக நிலைநாட்டியது.

மேல்நிலை வல்லரசுகளின் மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராக ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும், முதலாளித்துவம் ஒழிக என்ற முழக்கத்தின் கீழ் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பாட்டாளி வர்க்கமும், விவசாயிகள் மற்றும் சிறு உடைமை வர்க்கங்களும் தொடுத்து வரும் போராட்டங்கள் மென்மேலும் அதிகரித்து வருவதை எடுத்துக் காட்டிய பிளீனம், இவை முதலாளித்துவத்தின் படுதோல்விக்கும் கம்யூனிசத்தின் மீள்வருகைக்கும் கட்டியம் கூறுவதை எடுத்துக் காட்டி, சோசலிசமே மாற்று என்று பாட்டாளி வர்க்கம் முழங்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தியது. மூலதனமும் உழைப்பும் உலகமயமாக்கப்பட்டு வரும் இன்றைய சூழலில், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையும், பிராந்திய அளவிலான கூட்டமைப்புகளை தொழிலாளி வர்க்கம் உருவாக்கிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் புரட்சிகர கம்யூனிஸ்டு இயக்கங்களைக் கட்டி வளர்ப்பதன் தேவையையும் பிளீனம் சுட்டிக் காட்டியது.

உள்நாட்டு அரசியல் - பொருளாதார நிலைமைகளைப் பரிசீலித்த பிளீனம், இந்தியாவின் உயர்வளர்ச்சி என்பது பங்குச்சந்தை பலூன், ஏகாதிபத்தியம் சார்ந்த சேவைத்துறை மற்றும் ஆடம்பர நுகர்பொருள் துறை வளர்ச்சி, நிதிமூலதன ஆதிக்கம் ஆகியவற்றால் உருவாக்கப்படுவதே என்ற உண்மையை நிறுவியது. விவசாயத்துக்கான முதலீடுகள், கடன், மானியம் ஆகியவற்றைக் குறைப்பதன் மூலம் உலகவங்கியின் ஆணைப்படி உணவு தானிய உற்பத்தியைக் குறைப்பது, அரசுக் கொள்முதலை நிறுத்தி தானியச் சந்தையைத் தனியார்மயமாக்குவது, தொழில்மயமாக்கம் மற்றும் நகரமயமாக்கத்துக்காக விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பது, விவசாயத்தைச் சீர்குலைத்து நகரமயமாக்கத்தைத் தூண்டுவது போன்ற நடவடிக்கைகளால் விவசாயிகள் விவசாயத்தை விட்டே துரத்தப்படுவது, தற்கொலைக்குத் தள்ளப்படுவது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு வீழ்ச்சியடைவது, பிராந்திய, வர்க்க ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பது ஆகியன அனைத்தும் இந்த வளர்ச்சிப்பாதையின் அங்கங்களே என்பதையும், தனியார் குழும முதலாளித்துவத்தால் முன்னெடுக்கப்படும் இந்த வளர்ச்சி, பொதுச்சொத்துகளையும், இயற்கை வளங்களையும் அபகரிப்பதன் மூலமே எட்டப்பட்டிருக்கிறது என்பதையும், இது பெரும்பான்மை மக்களை விலக்கி வைக்கும் வளர்ச்சி என்பதையும் பிளீனம் தரவுகளிலிருந்து நிலைநாட்டியது. வரிவிலக்குகள், சலுகைகள், பொதுச்சொத்து ஆக்கிரமிப்பு ஆகியவற்றால் உலகின் பெரும் பணக்காரர்களாக உயர்ந்து, பல வெளிநாட்டு நிறுவனங்களைக் கையகப்படுத்தும் இந்தியத் தரகு முதலாளிகளின் மேல்தட்டுப் பிரிவினர், தங்கள் தரகுத் தன்மையை இழந்து விடவில்லை என்பதையும், இவர்கள் தேசங்கடந்த தரகு முதலாளிகளாக மாறியிருக்கிறார்கள் என்பதையும் பிளீனம் விவரங்களிலிருந்து நிலைநாட்டியது.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# சிதம்பரத்தின் காட்டுவேட்டைக்கு மாவோயிஸ்டுகளின் பதிலடி

''போர்ப் பிரகடனம் செய்!'' என வெறிக் கூச்சல் போடுகிறது, இந்தியக் கூட்டுப் பங்குத் தொழில் கழகங்களின் (கார்ப்பரேட் நிறுவனங்களின்) ஊதுகுழலான ''இந்தியா டுடே'' ஏடு. ''மென்மையான அணுகுமுறைகள் தோற்றுப் போய்விட்டன என்று தண்டேவாடா படுகொலைகள் காட்டிவிட்டன. தோட்டாவுக்குத் தோட்டா, நக்சல்கள் முறியடிக்கப்பட்டாக வேண்டும்.'' ஆனால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்டு)-களை ஒழித்துக் கட்டுவதோடு, மத்திய கிழக்கு இந்தியாவில் வாழும் ஆதிவாசி-பழங்குடி மக்களுக்கு எதிரான போரை இந்திய அரசு ஏற்கெனவே தொடங்கி ஆறுமாதங்களுக்கு மேலாகி விட்டன. இந்திய தொழில் மற்றும் வர்த்தகக் கழகங்களின் கூட்டமைப்பு (FICCI) கடந்த ஆண்டு மத்தியில் விடுத்த கோரிக்கையை ஏற்று, மாவோயிஸ்டுகளுக்கு எதிரான காட்டுவேட்டையைத் (ஆப்பரேஷன் கிரீன் ஹண்ட்) தொடங்கி, நவீன ஆயுதங்களுடன் 60,000 ஆயுதப் படையினரை ஏவிவிட்டதன் மூலம் ஒரு உள்நாட்டுப் போரை அது நடத்தி வருகிறது என்பதுதான் உண்மை.

பிறகு ஏன் உடனடியாகப் போர்ப் பிரகடனம் செய்யும்படி கூச்சல் போடவேண்டும்? கடந்த ஏப்ரல் ஆறாம் தேதி, அதிகாலை ஐந்தரை மணி. சட்டிஸ்கர் மாநிலம், தண்டேவாடா மாவட்டம், சிந்தல்நாடு கிராமத்துக்குச் சற்றுத் தொலைவில் முக்ரானா காடுகளில் தற்காலிக முகாமிட்டிருந்த மத்திய ரிசர்வ் படையின் ஆல்ஃபா கம்பெனி என்ற 62-வது பிரிவின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சியின் மக்கள் விடுதலைக் கொரில்லா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 76 ரிசர்வ் படையினர் கொல்லப்பட்டனர். உயிர் தப்பிக்க மரங்களின் பின்னே ஓடி ஒளிந்தவர்கள், அதனடியே புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்தனர். எஞ்சியவர்களை மீட்பதற்காக கோப்ரா (ராஜநாகப்) படைப்பிரிவு சென்ற குண்டு துளைக்க முடியாத கனரக ஆயுதந்தாங்கிய மோட்டார் வாகனமும் நிலக்கண்ணி வெடியில் சிக்கிச் சின்னாபின்னமாக வெடித்துச் சிதறியது. ஆறு மாதங்களுக்கு முன்பு மத்திய அரசுப் படையினர் தொடுத்த காட்டுவேட்டை என்ற உள்நாட்டுப் போர் நடவடிக்கையில் இதுவரை அதிகபட்சமாக இந்தத் தாக்குதலில் மட்டும் 76 பேர் கொன்றொழிக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் மாவோயிஸ்டுகள் பறிமுதல் செய்துள்ளனர்.

சிந்தல்நாடு தாக்குதல் ஆளும் வர்க்கங்கள், ஆட்சியாளர்கள், அவர்களுக்கு ஆதரவான அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, பத்திரிக்கைகள் மற்றும் வானொளி உட்பட செய்தி ஊடகங்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. மறுநாளே செய்தி ஊடகங்கள் கதறின. ''காட்டுமிராண்டித்தனம்'', ''படுகொலை'', ''இரத்த ஆறு'', ''நக்சல் கசாப்புக்கடை வெறி'', ''நக்சல் அட்டூழியம்'' என்று தலைப்புச் செய்திகள் நஞ்சைக் கக்கின. நக்சல்பாரிகளை விலங்கு மனிதர்கள், கோழைகள் என்று முத்திரை குத்தி வெறுப்பை உமிழ்ந்தன. நக்சல் அனுதாபிகள் மட்டுமல்ல, மனித உரிமைப் போராளிகள் கூடத் தீவிரவாதத்தின் கூட்டாளிகளாகச் சித்தரிக்கப்பட்டனர்.

திடீரென்று நாடே முற்றுகையிடப்பட்டு, முழுமையான, கிரமமான போரில் தள்ளப்பட்டதைப் போல ஆளும் வர்க்கக் கட்சிகள் கதறின. ''அரசு எந்திரம், இராணுவம், விமானப்படை உட்படத் தன்னிடம் உள்ள அனைத்துச் சக்திகளையும் திரட்டி நக்சலைட்டுகளை ஒழித்துக் கட்டிவிட வேண்டும்'' என்று அலறினார்கள். ''இராணுவத்தை நேரடியாக ஈடுபடுத்த முடியாவிட்டால், துணை இராணுவத்துக்கும், போலீசுக்கும் நவீன ஆயுதங்களைக் கொடுத்து மறு பயிற்சியும், மறு சீரமைப்பும் செய்து கிரமமான ஆயு


புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 7
மே 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00



தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561




படிப்பகம்

www.padippakam.com

தந்தாங்கிய படைகளுக்குச் சமமாக அவற்றைக் கட்டியெழுப்ப வேண்டும்; ஆயுதந்தாங்கிய கலகக்காரர்கள் எப்போதும் தாக்குதல் நிலையில் இருக்கும் போது, இராணுவ அதிகாரிகளைக் கொண்டு, இராணுவத்தைப் போலவே துணை இராணுவப் படைகளைத் தயாரிக்க வேண்டியது அவசர அவசியமாகி விட்டது; கலகக்காரர்களை ஒடுக்குவதற்கு என்றே தனிப்பயிற்சி பெற்ற துணை இராணுவப் படைகளை உருவாக்க வேண்டும்'' என்று ஆளும் வர்க்க அறிவுஜீவிகள் ஆட்சியாளர்களுக்கு உபதேசங்கள் செய்கின்றனர்.



மாவோயிஸ்டுகள் சிந்தல்நாடு பகுதியில் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட துணை இராணுவப்படை சிப்பாய்களின் சடலங்கள்.

சிந்தல்நாடு தாக்குதலுக்கும், இவ்வளவு பெரிய இழப்புக்கும் காரணம், தக்க பயிற்சி பெறாத படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டதும், போதிய உளவுத் துறை தகவல் இல்லாமல் போனதும்தான் காரணம் என்று கூறும் எதிர்ப்புரட்சி நிபுணர்கள் ஆந்திராவில் செய்ததைப் போலத் தனியார், அரசு கிரிமினல் கொலைப்படைக் குழுக்களை உருவாக்கி, நக்சல்பாரிகளின் தலைமையைக் குறிவைத்துக் கொன்று விட வேண்டும். அதற்காக இரகசியமான, சட்டத்துக்குப் புறம்பான உளவு மற்றும் கொலைக் குழுக்களின் வலைப்பின்னலை உருவாக்க வேண்டும்'' என்று சகுனித்தனமான ஆலோசனைகளைக் கூறுகின்றனர். ஒட்டுமொத்த சமுதாயத்தையும் ஈவு இரக்கமற்ற, கொடூரமான, இராணுவமயமான காட்டுமிராண்டித்தனத்துக்குள் தள்ளுவதற்கே இது இட்டுச் செல்லும். சந்தேகத்துக்கிடமான எவரையும் சுட்டுத் தள்ளுவதைத்தான் குஜராத்திலும், பஞ்சாபிலும், காஷ்மீரிலும், வடகிழக்கு இந்தியாவிலும் இந்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அதையே மத்திய இந்தியா முழுவதும் விரிவாக்கும்படி ஆளும் வர்க்க அறிவுஜீவிகள் பரிந்துரைக்கிறார்கள்.

சிந்தல்நாடு தாக்குதல் மற்றும் இழப்புகளுக்காக இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கும் அறிவுஜீவிகளும் செய்தி ஊடகங்களும் சில உண்மைகளை வசதியாக மறந்து விடுகிறார்கள். சட்டிஸ்கர், ஆந்திரா, மராட்டியத்தில் எண்ணற்ற சிவிலியன் மக்கள் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான தேடுதல் வேட்டை என்ற பெயரில் துணை இராணுவத்தாலும், கொலைக் குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். முன்னாள் போலி கம்யூனிஸ்டு - இன்னாள் காங்கிரசு எம்.எல்.ஏ. தலைமையில் அரசே உருவாக்கியுள்ள சல்வாஜூடும் என்ற குண்டர்படையின் சிறப்பு போலீசு அதிகாரிகள் தலைவெட்டிக் கொலைகள், பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள், பழங்குடி மக்களின் குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்துவது - சூறையாடுவது என்று கொலைவெறியாட்டங்கள் புரிந்துள்ளனர். ஈழத்தில் முள் கம்பி வேலிக்குள், அரசு சித்திரவதை முகாமுக்குள் தமிழர்கள் அடைத்து வைக்கப்பட்டிருப்பதைப் போல, இங்கே மூன்று இலட்சம் பழங்குடி மக்கள் தமது குடியிருப்புகளில் இருந்து விரட்டப்பட்டு, அகதிகள் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.



**சிதம்பரத்தின்**
**இந்தப் போர்ப் பிரகடனத்தைப்**
**பகுத்துப் பார்த்தால்,**
**இந்திய அரசு யாருக்காக, எதற்காக**
**இந்த உள்நாட்டுப் போரை**
**நடத்தி வருகிறது**
**என்ற உண்மைகள் விளங்கும்.**

சிந்தல்நாடு தாக்குதலில் மாவோயிஸ்டுகளின் கொரில்லா இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களைவிடப் பன்மடங்கு அதிகமானவர்களை இந்தியத் துணை இராணுவமும், போலீசும் தேடுதல் வேட்டை என்ற பெயரில் கொன்று போட்டிருக்கிறது. சிந்தல்நாடு தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் நிராயுதபாணிகளான சிவிலியன் மக்கள் அல்ல. ஆயுதந்தரித்த துணை இராணுவத்தினர்தாம். ஆனால் 2009-ஆம்



படிப்பகம்

ஆண்டில் மட்டும் மாவோயிஸ்டுக ளின் செல்வாக்குள்ளதாகக் கூறப்ப டும் பகுதிகளில் 589 சிவிலியன் மக் களை அரசப் படைகள் கொன்று போட்டிருக்கின்றன; சிறுவர்களின் விரல்களை வெட்டிப் போட்டுள்ள னர்; பெண்ணின் மார்பகத்தை அறுத்து வீசியுள்ளனர்; இதைவிடக் கொடூரம் - காட்டுமிராண்டித்தனம் என்ன இருக்க முடியும்! சட்டிஸ்கரின் பஸ்தார் பிராந்தியத்தில் மட்டும் வீடு களைச் சூறையாடியும், இடித்துத் தள் ளியும், தீயிட்டுக் கொளுத்தியும் 700 பழங்குடி கிராமங்களைச் சுடுகாடு களாக்கி விட்டனர்.



தண்டேவாடா காடுகளில் அமைந்துள்ள மாவோயிஸ்டு கட்சியின் மக்கள் கொரில்லா விடுதலைப் படையின் தற்காலிக முகாம்.

இவ்வளவு அட்டூழியங்களை யும் செய்தி ஊடகங்களின் உடந்தை யோடு மூடி மறைத்து விட்டு, ''இது ஒரு போர்; ஆயுதந்தரிக்கவோ, கொல்லவோ சட்டபூர்வ உரிமையில் லாதவர்களால் அரசின் மீது திணிக்கப்பட்ட போர். தேவையானால் இராணுவம், விமானப் படையைக் கூட பயன்படுத்தி இதை எதிர்கொள்வோம்'' என்று கார்ப்பரேட் கம்பெனிகளின் முன்னாள் ஆலோசகரும் தற்போதைய மத்திய போலீசு மந்திரியுமான சிதம்பரம் எச்சரிக்கிறார், மிரட்டுகிறார்.

சிதம்பரத்தின் முறைப்படியான இந்தப் போர்ப் பிரகடனத்தைப் பகுத்துப் பார்த்தால், தற்போது இந்திய அரசு யாருக்காக, எதற்காக இந்த உள்நாட்டுப் போரை நடத்தி வருகிறது என்ற உண்மைகள் விளங்கும். நிச்சய மாக மாவோயிஸ்ட்கள் இந்த உள்நாட்டுப் போருக்கு வழிவகுக்கவில்லை. பழங்குடி மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமது வாழ்விடங்களாகக் கொண் டுள்ள மத்திய இந்தியாவின் கனிம வளங்கள், காட்டு வளங்கள், நிலம், நீர் மற்றும் இயற்கை மூலாதாரங் களை பன்னாட்டு, இந்நாட்டுத் தரகு அதிகார வர்க்கக் கூட்டுப் பங்குத் தொழில் நிறுவனங்களுக்கு அற்ப - சொற்ப விலைக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதற்கு ஒப்பந்தங்கள் போட்டுள்ளது, மன்மோகன் - மாண் டேக் சிங் - சோனியா - சிதம்பரம் கும்பல். இந்த இயற்கை வளங்களைச் சூறையாடுவதற்கு வசதியாக பழங்குடி மக்களை அந்தப் பிராந்தியத்திலிருந்து விரட்டியடித்து வருகிறது.

இயற்கை வளங்களை அதன் உரிமையாளர்களான பழங்குடி மக்களிடமிருந்து மனிதாபிமானமற்ற முறை யில் பிடுங்கி, பன்னாட்டு - இந்நாட்டு தொழில் முதலைகளுக்குப் பங்கு வைப்பது என்பது அரசின் பொருளாதாரக் கொள்கையாகிவிட்ட நிலையில், அதற்குத் தடையாக நிற்கும் பழங்குடி மக்களையும், அவர்களுக்குப் பாதுகாவலனாக நிற்கும் மாவோயிஸ்டு களையும் துணை இராணுவம் மற்றும் இராணுவம் ஆகிய அரசுப் படைகளை ஏவிவிட்டு வரலாறு காணாத காட்டுமிராண்டி பயங்கரவாத்தை ஏவிவிட்டு, பிரகட னப்படுத்தாத உள்நாட்டுப் போரை இந்திய அரசுதான் தொடுத்தது. இதை ஒரு போர் என்று அரசு முறைப்படி பிரகடனப்படுத்தியதா அல்லது மாவோயிசத் தீவிர வாதத்தை இராணுவ ரீதியில் அடக்கி ஒடுக்குவோம் என்று திரும்பத்திரும்ப பலமுறை சொல்கிறதா என்பது முக்கியமில்லை. நடைமுறையில் இந்திய அரசு உள் நாட்டுப் போரைத்தான் நடத்தி வருகிறது.

பழங்குடி மக்களுக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் எதிராக இந்திய அரசு நடத்திவரும் இந்த உள்நாட்டுப் போரின் உண்மையான நோக்கத்தை வெளிப்படை யாகக் கூறி நியாயப்படுத்த முடியாத ஆட்சியாளர்கள், திரும்பத் திரும்பக் கூறிவரும் ஒரே தர்க்கவாதம், மாவோயிஸ்டுகளுக்கு ஆயுதந்தரிக்கவும் யாரையும் கொல்லவும் சட்டபூர்வமான உரிமை எதுவும் கிடை யாது; அரசுப் படைகள் அவ்வாறு செய்வதற்கான எல்லா நியாய உரிமைகளும் உள்ளன; ஏனென்றால், அவை ஜனநாயகபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அர சால் வழிநடத்தப்படுகின்றன என்பதுதான்.

''ஜனநாயகப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசி னால் வழிநடத்தப்படுகிறது'' என்பதற்காக இந்திய அரசுப் படைகள் மேற்கொள்ளும் சித்திரவதைகள், பாலியல் வன்முறை, படுகொலைகள், போலி மோதல் கள், சூறையாடுதல்கள் ஆகிய காட்டுமிராண்டித் தனமான பயங்கரவாத நடவடிக்கைகள் அனைத்திற் கும் சட்டப்படியான, நியாயப்படியான உரிமை உண்டா? ஜனநாயகப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்பதால் இந்நாட்டின் இயற்கை வளங்களை பன் னாட்டு - இந்நாட்டுத் தரகு அதிகார வர்க்கங்கள் சூறை யாடுவதற்கும் தாரை வார்ப்பதற்கும் கூடச் சட்டப் படியான நியாயப்படியான உரிமை அதற்கு உண்டா? இந்த நோக்கங்களுக்குத் தடையாக நிற்கும் தம் சொந்த மக்களையே கொன்றொழிக்கும் உள்நாட்டுப் போரை நடத்தவும் உரிமை உண்டா?



படிப்பகம்

www.padippakam.com

## தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்:

# பசியைப் போக்குமா? பட்டினியில் தள்ளுமா?

**பொது மக்களுக்கு ரேசன் கடைகளின் மூலம் கிடைத்து வரும் அற்பமான பலன்களும் பறிக்கப்படும் அபாயம் நெருங்குகிறது.**

உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து கொண்டே போவதைக் கட்டுப்படுத்துவதற்கு சிறு துரும்பைக்கூட எடுத்துப் போட விரும்பாத மன்மோகன் சிங் அர, இந்திய மக்கள் அனைவருக்கும் உணவு கிடைப்பதை உத்திரவாதப்படுத்துவதற்காகத் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வரப் போவதாக அறிவித்திருக்கிறது. இது தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள நகல் சட்டத்தை ஆராய்ந்த மைய அரசின் அமைச்சரவைக் குழு, இந்த நகலில் சில திருத்தங்களைச் செய்யச் சொல்லிப் பரிந்துரைத்திருக்கிறது. மைய அரசின் இந்தக் கரிசனத்தைக் கேள்விப்படும்பொழுது, ரொட்டி வாங்க முடியாமல் திண்டாடிய பிரெஞ் மக்களிடம் கேக் வாங்கிச் சாப்பிடச் சொல்லி பிரெஞ் பேரரசி கிண்டலடித்த வரலாற்று வக்கிரம்தான் நினைவுக்கு வருகிறது.

இந்த நகல் சட்டம், அதன் முன்னுரையில் இந்திய மக்கள் அனைவருக்கும் உணவு அளிப்பதை உரிமையாக்கப் போவதாகப் பீற்றிக் கொண்டாலும், உட்பிரிவுகளிலோ வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் என மைய அரசின் திட்டக் கமிசனால் அடையாளம் காணப்படுபவர்களுக்கு மட்டும்தான் இந்தப் 'பாதுகாப்பை' அளிக்கப் போவதாக வரம்பிட்டுக் கொண்டுள்ளது. மேலும், தீவிரவாதம் பாதித்துள்ள பகுதிகளிலும், மைய அர பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் காலங்களிலும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்றும் வரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன.

2001-ஆம் ஆண்டில், ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடி இன மக்கள் பட்டினியால் இறந்து போவது மீண்டும் அம்பலமானபொழுது, அப்பிரச்சினையில் தலையிட்ட உச்சநீதி மன்றம், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நியாய விலைக் கடைகளின் மூலம் மாதமொன்றுக்கு 35 கிலோ அரிசி அல்லது கோதுமை வழங்க வேண்டும் என உத்தரவிட்டது. தற்பொழுது விவாதத்தில் உள்ள உணவு உரிமை நகல் சட்டமோ, இதனை 25 கிலோவாகக் குறைத்துவிட்டது. இந்த நகல் சட்டம் விவாதத்திற்கு வந்தபொழுது, வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு இப்படி அநியாயமாகக் குறைக்கப்பட்டுள்ளதைத் திருத்த வேண்டும் என எந்தவொரு அமைச்சரும் கோரவில்லை.

இந்தியாவில் வசிக்கும் ஏழைக் குடும்பங்களின் எண்ணிக்கை 6.5 கோடியா, 8.5 கோடியா அல்லது அதற்கும் மேலா என்பதைச் ற்றித்தான் அமைச்சரவையில் விவாதம் நடந்தது. இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை திட்டக் கமிசனின் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியாவிடம் ஒப்படைத்திருக்கிறது, மைய அமைச்சரவை. நாளொன்றுக்கு 11 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் இந்திய மக்கள் அனைவரையும் வறுமைக் கோட்டுக்கு மேல் வாழ்பவர்களாக வகைப்படுத்த வேண்டும் என்ற ''கறாரான'' கொள்கையைக் கொண்டவர் அலுவாலியா என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



கிராமப்புறங்களில் இருந்து வேலை தேடி நகரத்திற்கு வந்து, நடைபாதையில் வசித்து வரும் கூலித் தொழிலாளர்களுக்கு நிரந்தர முகவரியில்லை என்ற காரணத்தைக் கூறி, குடும்ப அட்டைகள் வழங்க மறுத்து வருகிறது, அர .



படிப்பகம்

தற்பொழுது இந்தியாவெங்கும் 10.5 கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களாக வகைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு அதற்குரிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதில், 60% குடும்ப அட்டைகள் போலியானவை என்பது திட்டக் கமிசனின் மதிப்பீடு. வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை 7.5 கோடியைத் தாண்டக் கூடாது என்பதுதான் அலுவாலியாவின் தனிப்பட்ட கணக்கு. இந்த நகல் சட்டத்தின்படி வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கையை முன்பு போல மாநில அரசுகள் தீர்மானிக்க முடியாது; திட்டக் கமிசனுக்கு மட்டுமே அந்த உரிமை வழங்கப்பட்டுள்ளதால், இனி இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிடும் என உறுதியாக நம்பலாம்.

நியாய விலைக் கடைகளில் நடைபெறும் முறைகேடுகளை ஆராய்வதற்காக உச்சநீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட வாத்வா கமிட்டி, நாளொன்றுக்கு 100 ரூபாய்க்குக் குறைவாகக் கூலி பெறும் குடும்பங்களை வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வதாகக் கணக்கிட வேண்டும் எனப் பரிந்துரைத்திருக்கிறது. இதோடு ஒப்பிட்டால், திட்டக் கமிசனின் வறுமை பற்றிய கணக்கீடு எவ்வளவு அபாயகரமானது, மக்கள் விரோதத் தன்மை வாய்ந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அனைவருக்குமான உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் எனக் கூறி வரும் 'இடது' சாரிக் கட்சிகளும், அரசாரா அமைப்புகளும், சில

> **இந்நகல் சட்டம் ரேசனில் வழங்கப்படும் அரிசி/கோதுமையின் அளவைக் குறைக்குமாறு கூறியுள்ள ஆலோசனையால், மைய அரசுக்கு உணவு மானியத்தில் ரூ.4,000/- கோடி ரூபாய் மிச்சமாகும்.**

பொருளாதார நிபுணர்களும் இச்சட்டத்தின் கீழ் அரிசியும் கோதுமையும் மட்டும் வழங்கினால் போதாது; எண்ணெய், பருப்பு வகைகள், சர்க்கரை உள்ளிட்ட சில அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் சேர்த்து வழங்க வேண்டும் எனக் கோரி வருகிறார்கள். இந்தக் கோரிக்கையை உணவு உரிமை நகல் சட்டம் மட்டுமல்ல, மைய அமைச்சரவைக் குழுவும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது.

மேலும், ஏழைகள் என்பதை வருமான அடிப்படையில் மட்டும் தீர்மானிக்கக் கூடாது; ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைக்கும் சத்தான சரிவிகித உணவு என்பதையும் அளவுகோலாகக் கொள்ள வேண்டும்; நாளொன்றுக்கு 2,200 கலோரிகளுக்கும் குறைவான உணவை உட்கொள்பவர்களையும் இச்சட்டத்தின் கீழ்

## பட்டினிச் சாவின் விளிம்பில் குழந்தைகள்: நாட்டிற்கே அவமானம்!

• உலகெங்கிலும் உள்ள ஏழை நாடுகளில் வயதுக்கு ஏற்ற வளர்ச்சியின்றி வாழும் ஐந்து வயதுக்குக் கீழான குழந்தைகளின் எண்ணிக்கை 19.5 கோடி. இதில் இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 6.1 கோடி குழந்தைகள் வயதுக்கு ஏற்ற வளர்ச்சியின்றி உள்ளனர்.

• உலகெங்கிலும் உள்ள ஏழை நாடுகளில் உயரத்துக்கு ஏற்ற எடையின்றி வாழும் ஐந்து வயதுக்குக் கீழான குழந்தைகளின் எண்ணிக்கை 7.1 கோடி. இதில் இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 2.5 கோடி குழந்தைகள் உயரத்துக்கு ஏற்ற எடையின்றி உள்ளனர்.

• உலகெங்கிலும் உள்ள ஏழை நாடுகளில் வயதுக்கு ஏற்ற எடையின்றி வாழும் ஐந்து வயதுக்குக் கீழான குழந்தைகளின் எண்ணிக்கை 12.9 கோடி. இதில் இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 5.4 கோடி குழந்தைகள் வயதுக்கு ஏற்ற எடையின்றி உள்ளனர்.

இந்த குழந்தைக்குச் சத்தான உணவு கிடைக்காமல் போனதற்கு யார் காரணம்?



ஆப்பிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த பல ஏழை நாடுகளை விட, ''வல்லரசு'' இந்தியா பட்டினி இந்தியாவாக இருக்கிறது என்பதைத்தான் இந்தப் புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒருபுறம், நிரம்பி வழியும் இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகள்; இன்னொருபுறமோ, பல கோடி இந்தியக் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள அவலக் காட்சி. ஏழைக் குழந்தைகளின் பட்டினியைப் போக்கப் பயன்படாத இந்த உணவு தானியக் கையிருப்பு யாருக்குப் பயன்படப் போகிறது? அதோ, உணவு தானியங்களை ஏற்றுமதி செய்து அமெரிக்க டாலரைச் சம்பாதிக்கும் ''பசியோடு'' காத்துக் கிடக்கிறார்கள் முதலாளிகள்; மன்மோகன் சிங்கின் கண்ணசைவிற்காக!



படிப்பகம்

www.padippakam.com



அனைவருக்குமான பொது விநியோக முறையைக் கொல்லைப்புற வழியாக நீக்கிவிட முயலுகிறது, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்.

கொண்டு வர வேண்டும் என்றும் இவர்கள் கோரி வருகின்றனர். ஆனால், மைய அரசோ இக்கலோரியின் அளவை 1,700 எனத் தீர்மானித்திருப்பதன் மூலம், பல்லாயிரக்கணக்கான மக்களை இச்சட்டத்தின் கீழ் வருவதில் இருந்து அப்புறப்படுத்திவிட்டது.

அந்தோதயா திட்டம், அன்னபூர்னா திட்டம் ஆகியவை மூலம் தற்பொழுது 35 கிலோ அரிசியோ, கோதுமையோ பெற்றுவருபவர்களுக்கும், இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு 25 கிலோ அரிசி அல்லது கோதுமை மட்டுமே கிடைக்கும். அதாவது, இச்சட்டம் நடைமுறைக்கு வரும்பொழுது அத்திட்டங்கள் தானாகவே காலாவதியாகிவிடும். எனவே, இத்திட்டங்களின் கீழ் வரும் ஏழை மக்கள், அரசால் நிறுத்தப்படும் 10 கிலோ அரிசியையோ, கோதுமையையோ வெளிச் சந்தையில்தான் வாங்க நேரிடும். இதனால் இந்த ஏழை மக்கள் தங்களின் உணவுத் தேவைக்குத் தற்பொழுது செலவழிப்பதைவிடக் கூடுதலாக ரூ.200/- செலவழிக்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்படுவர். இன்னொரு புறமோ, ரேசனில் வழங்கப்படும் அரிசி/கோதுமையின் அளவை இச்சட்டம் தடாலடியாகக் குறைப்பதனால், மைய அரசுக்கு உணவு மானியத்தில் ரூ.4,000/- கோடி ரூபாய் மிச்சமாகும்.

தனியார்மயத்தின் ஆதரவாளர்கள், ரேசன் கடைகளின் மூலம் ஏழைகளுக்கு நேரடியாக உணவுப் பொருட்களை வழங்குவதற்குப் பதிலாக, உணவுக் கூப்பன்களை வழங்கலாம் என்ற ஆலோசனையை முன்வைத்து வருகிறார்கள். உணவுக் கூப்பன்களை வழங்கும் முறைக்கு மாறினால், அரசிற்கு விவசாயிகளிடமிருந்து அரிசி/கோதுமையைக் கொள்முதல் செய்து சேமித்து வைக்க வேண்டிய அவசியம் இருக்காது; நியாய விலைக் கடைகளை நடத்த வேண்டிய தேவையும் எழாது. இந்த நகல் சட்டம், ''உணவுப் பொருட்களை வழங்க முடியாத காலக்கட்டங்களில், பயனாளிகளுக்கு பண இழப்பீடு வழங்கப்படும்'' எனக் கூறியிருப்பதன் மூலம், அவர்களின் ஆலோசனையைக் கொல்லைப்புற வழியாக நடைமுறைப்படுத்த முயலுகிறது; ஏழை மக்களைச் சூதாட்டம் நிறைந்த வெளிச் சந்தையில் தள்ளிவிட முயலுகிறது.

நக்சலைட்டு தீவிரவாதம் பாதித்த பகுதிகளில் இச்சட்டம் நடைமுறைக்கு வராது என்பதன் உண்மையான பொருள், அரக்கு எதிராக யாராவது போராடினால் அந்த மக்கட் பிரிவினருக்கு மானிய விலையில் உணவுப் பொருட்களை வழங்க மாட்டோம் என மிரட்டல் விடுவதுதான். காட்டு வேட்டை நடக்கும் பழங்குடியினப் பகுதிகளில் பெயரளவில் இருக்கும் நியாய விலைக் கடைகளைச் சட்டபூர்வமாகவே இழுத்து மூடிவிடும் சதித்தனத்தைக் கொண்டுள்ளது இந்த நகல் சட்டம். மாவோயிஸ்டுகளை ஆதரிக்கும் பழங்குடியின மக்களை மேலும் மேலும் பட்டினிக்குள் தள்ளிவிடும் குரூரப் புத்தியைத்தான் இந்த நகல் சட்டம் எடுத்துக் காட்டுகிறது.

பொருளாதார நெருக்கடியில்கூடத் தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய்களை வரிச் சலுகையாக அளிக்கத் தயங்காத அர, அப்படிப்பட்ட சமயங்களில் தேசிய உணவுப்பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்து விடுவோம் எனக் கூறுகிறது. பொருளாதார நெருக்கடி மிகுந்த சமயத்தில் மக்கள் பட்டினி கிடக்கலாம்; ஆனால், தரகு முதலாளிகளின் இலாபத்திற்கு எந்தப் பங்கமும் வந்துவிடக் கூடாது என்பதுதான் அரசின் 'உயர்ந்த' குறிக்கோள். இந்திய அரசின் வர்க்கத் தன்மையைப் புரிந்துகொள்ள இதற்கு மேல் வேறென்ன எடுத்துக்காட்டு வேண்டும்?

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றால், நியாய விலைக் கடைகளில் நடந்துவரும் ஊழல்/முறைகேடுகளைக் களைய வேண்டும்; அதற்கு சண்டிகர் மாதிரியை நாடெங்கும் அமல்படுத்த வேண்டும் என மெத்தப் படித்த மேதாவிகள் ஆலோசனை கூறி வருகிறார்கள். சண்டிகர் மாதிரி என்பது பொது விநியோக முறையை உலக வங்கியின் கட்டுப்பாடு-நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் திட்டமாகும்.

இதோ பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது. அனைவருக்குமான பொது விநியோக முறையை (Universal Public Distribution System) இந்தியாவெங்கும் முற்றிலுமாகக் கைவிட வேண்டும்; அதே சமயம், ரேசன் கடைகளின் மூலம் 'பயன்' பெறும் ஏழை மக்களின் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டும்; அதன் வழியாக உணவு மானியத்தை வெட்ட வேண்டும்; பொது விநியோக முறையில் உலக வங்கியின் கட்டளைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற மறுகாலனிய நோக்கங்களை நிறைவேற்றுவதுதான் இச்சட்டத்தின் உண்மையான நோக்கம். அந்த நோக்கத்தை மறைத்திருக்கும் சல்லாத் துணிதான் உணவுப் பாதுகாப்பு என்ற வார்த்தை!

• குப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# ரவுடி போலீசாருக்கு அரணாக நிற்கும் கருணாநிதிக்குக் கருப்புக் கொடி!

# வழக்குரைஞர்களின் கலகம்!

கடந்த ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாளன்று, ஈழப்பி ரச்சினையையொட்டி, பார்ப்பன சகுனி சுப்பிரமணிய சாமியை எதிர்த்துப் போராடிய வழக்குரைஞர்களைப் போலீசார் நாள் முழுக்கக் கொடூரமாகத் தாக்கிய பயங் கரவாதத்தைத் தமிழக மக்கள் மறந்திருக்க முடியாது. இந்தக் காக்கிச் சட்டை பயங்கரவாதத்தில் இருந்து நீதி பதிகளும் தப்பவில்லை. நீதிமன்றத்தையே சூறையாடிய போலீசு பயங்கரவாதத்தை எதிர்த்து வழக்குரைஞர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். ஆனால், எந்தப் போலீசு அதிகாரி மீதும் இதுவரை நடவடிக்கை எடுக் கப்படவில்லை. நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நீதிபதிகள் இப்ராஹிம் கலிபுல்லா, பானுமதி அடங்கிய பெஞ்ச் உத்தரவிட்ட போதிலும், கருணாநிதி அரசு அசைந்து கொடுக்கவில்லை.

இந்நிலையில், கடந்த 25.4.10 அன்று சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை திறப்புவிழா ஏற்பாடா கியிருந்தது. போலீசு அதிகாரிகள் மீது நட வடிக்கை எடுக்காத முதல்வர் இந்த விழா வுக்கு வரக்கூடாது என்று வழக்குரைஞர் கள் எதிர்ப்பு தெரிவித்தனர். முதல்வர் வரு கையைக் கண்டித்து பெரும்பாலான வழக் குரைஞர்கள் விழாவைப் புறக்கணித்தனர். விழாவுக்கு இரு நாட்கள் முன்னதாகவே, மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் (HRPC) சேர்ந்த வழக்குரைஞர்கள், ''குற்ற வாளி போலீசைப் பாதுகாக்கும் கருணா நிதியே திரும்பிப் போ!'' என்ற முழக்கத் துடன் துண்டுப் பிரசுரம் விநியோகித்து, உயர்நீதி மன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இருப்பினும் இவற்றையெல் லாம் அலட்சியப்படுத்திவிட்டு இந்த விழாவில் கருணாநிதி கலந்து கொண் டார்.

இவ்விழாவில் முத்தாய்ப்பாகத் தமிழக முதல்வர் கரு ணாநிதி பேச ஆரம்பித்தபோது, திடீரென எழுந்த மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் (HRPC) சேர்ந்த வழக் குரைஞர்கள், கருப்புக் கொடி ஏந்தி வழக்குரைஞர்க ளைத் தாக்கிய போலீசு மீது நடவடிக்கை எடுக்காத கருணாநிதி அரசைக் கண்டித்து முழக்கமிட்டனர். அக்கூட்டத்திற்கு கருப்பு பேண்ட்-வெள்ளைச் சட்டை யுடன் அழைத்து வரப்பட்ட தி.மு.க.வின் வடசென்னை மாவட்டச் செயலர் பாபுவின் அடியாட்கள், இத்தோழர் கள் மீது நாற்காலிகளை எடுத்து வீசிக் கற்களாலும் தாக்கி னர். மேடைக்கு எதிரே பத்து நிமிடங்களுக்கும் மேலாக இக்கொடூரத் தாக்குதல் நடந்தபோதிலும், இந்த ரவுடித் தனத்தை போலீசு வேடிக்கைப் பார்த்தது. படுகாயம டைந்த இத்தோழர்கள் மீது பல பிரிவுகளில் பொய் வழக்குப் போட்டுள்ளது, போலீசு.

இக்கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்தும் தி.மு.க. ரவுடிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் 27.4.10 அன்று பிற்பகலில் நீதிமன்ற வளாகத்தில் பெருந் திரளான வழக்குரைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதைத் தொடர்ந்து, உயர்நீதி மன்றத்தில் வெறியாட்டம் போட்ட போலீசுக்கு அரணாக நிற்கும் தமிழக முதல்வ ருக்குக் கருப்புக் கொடி காட்டிய வழக்குரைஞர்கள் மீது, தி.மு.க. ரவுடிகளை ஏவி கொலைவெறித் தாக்குதல் நடத்தியதை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றம் எதிரே யுள்ள ஒய்.எம்.சி.ஏ. அரங்கில் 29.4.10 அன்று கண்டனக்



''குற்றவாளி போலீசைப் பாதுகாக்கும் கருணாநிதியே திரும்பிப் போ!'' என்ற முழக்கத்துடன் கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் வழக்குரைஞர்கள்.

கூட்டம் நடைபெற்றது. மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழகத் தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பிரபல வழக்குரை ஞர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றினர். நீதிமன்ற வளாகத்திலேயே முதல்வர், அமைச்சர்கள், நீதிபதிகள் முன்னிலையிலேயே இப்படியொரு வன்முறை வெறி யாட்டம் நடந்திருக்கிறதென்றால், இது ஜனநாயக ஆட் சியா, காட்டாட்சியா என்று கேள்வி எழுப்பி, இக்கூட் டத்தில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

— பு.ஜ. செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com

# கோக் எதிர்ப்பு: பிளாச்சிமடா மக்களுக்குக் கிடைத்த இடைக்கால வெற்றி!

**பிளாச்சிமடாவின் நிலத்தையும், நிலத்தடி நீரையும் மாசுபடுத்திய கோக்கின் மீது 200 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.**

கேரளாவின் பாலக்காடு மாவட்டத்திலுள்ள பிளாச்சிமடா கிராமத்தில் அமைந்துள்ள கோக் ஆலையை எதிர்த்து அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் நடத்திவரும் போராட்டத்தை யாரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் அப்போராட்டத்தில் தற்பொழுது முக்கியமான திருப்புமுனை ஏற்பட்டுள்ளது.

பிளாச்சிமடா பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த மக்கள் விடாப்பிடியாக நடத்திவரும் போராட்டத்தின் காரணமாக, கேரள மாநில அர , கோக் ஆலைக்கு எதிராக மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்வதற்காக ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட நிபுணர் குழுவொன்றைச் சில மாதங்களுக்கு முன் அமைத்தது. அந்நிபுணர் குழு, கோக் ஆலையின் செயல்பட்டால் அப்பகுதியின் நிலத்தடி நீர் வற்றிப் போனதையும், அவ்வாலையில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகளால் நிலத்தடி நீரும் நிலமும் மாசடைந்து போனதையும் தற்பொழுது உறுதி செய்திருப்பதோடு, இதற்காக கோக் நிர்வாகம் அப்பகுதி மக்களுக்கு 200 கோடி ரூபாய் நட்ட ஈடாக வழங்க வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. மேலும், அப்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் எவ்வளவு தொகை நட்ட ஈடாக வழங்குவது என்பது குறித்து முடிவு செய்யவும் அதிகாரமிக்க கமிட்டியொன்றை அர அமைக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

கேரள மாநிலத்தின் நெற்களஞ்சியமாக அறியப்படுவது பாலக்காடு மாவட்டம். பிளாச்சிமடா கிராமம் அமைந்துள்ள சித்தூர் வட்டம் நெற்களஞ்சியத்தின் நெற்களஞ்சியம் எனப் பெயரெடுத்த பகுதி. நெல், தென்னை, கடலை, பருத்தி, கரும்பு, வாழை, மிளகு, கேழ்வரகு, மா, ஆரஞ் , ஏலக்காய், ரப்பர் மற்றும் காய்கனிகள் என முப்போகம் விளைந்த பிளாச்சிமடா பகுதி, கோக் ஆலை பிளாச்சிமடாவில் இயங்க ஆரம்பித்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே பாலைவனம் போலாகிப் போனது. கோக், ஒவ்வொரு நாளும் குறைந்தது 15 இலட்சம் லிட்டர் நீரை உறிஞ்சி எடுத்ததாலும், தனது ஆலைக் கழிவுகளை வயல்வெளியிலேயே கொட்டியதாலும் ஏற்பட்ட நிலைமை இது.

ஆலைக்கு நிலத்தை விற்ற பண்ணையாரிடம் கூலி வேலை செய்து வந்த பழனி, ஒரே வரியில் இந்த அவல நிலைமையை விளக்குகிறார். ''அன்று ஒரு ரூபாய் சம்பளம். சோற்றுக்கும் பஞ்சமில்லை; நல்ல தண்ணீருக்கும் அன்று பஞ்சமில்லை. இன்று பண்ணையார் கொடுத்த 5 செண்டு நிலமிருக்கிறது. ஆனால், கிணற்றில் தண்ணீர் இல்லை.''

கோக் ஆலைக்கு அருகில் 4 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஷாகுல் அமீது 2002-க்குப் பிறகு தன்னால் விவசாயமே செய்ய முடியவில்லை என்கிறார். நான் 20 பேருக்கு வேலை கொடுத்தேன். இன்று மகனுடைய சம்பளத்தில்தான் தனது வயிற்றை கழிவிக் கொண்டிருப்பதாகப் பொருமுகிறார், அவர்.

நீர் வளமிக்க பிளாச்சிமடா கிராமத்தின் மக்கள் கோக் ஆலையின் வருகைக்குப் பின்னர், தங்களது தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்கே லாரித் தண்ணீரை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கோக் ஆலையால் மா படுத்தப்பட்ட நிலத்தடி நீரைத் துணிகளைத் துவைப்பதற்குக்கூடப் பயன்படுத்த முடியாது என்கிறார்கள் அப்பகுதி மக்கள்.

கோக் ஆலையை இழுத்து மூடக் கோரி, பிளாச்சிமடா கிராம மக்கள் அவ்வாலையின் முன்னே நடத்திய மறியல் போராட்டம். (கோப்புப் படம்).





படிப்பகம்

www.padippakam.com

கோக் ஆலையால் இப்படி மாசுபடுத்தப்பட்ட நிலத்தடி நீரையும், நிலத்தையும் மீண்டும் தூய்மைப்படுத்துவதற்கும், கோக் ஆலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்கும் இந்த 200 கோடி ரூபாய் போதுமா எனக் கேட்க வேண்டிய நேரத்தில், கோக் ஆலையோ தனக்குத் தண்டனை அளிக்க இந்த நிபுணர் கமிட்டிக்கு அதிகாரம் கிடையாது எனக் கொக்கரிக்கிறது. நிபுணர் குழு விசாரணைக்கு அழைத்தபொழுது, அதற்கு உடன்படவும் மறுத்து வந்தது, கோக் நிர்வாகம். அரசு அமைத்த நிபுணர் குழுவின் உத்தரவைக் கழிப்பறைக் காகிதம் போல் தூக்கி வீசுவது, அரசின் அதிகாரத்திற்கே சவால் விடுவதற்குச் சமமானது என்ற போதிலும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் பேசும் கேரள மாநில சி.பி.எம். அரசாங்கம் கோக்கின் இந்தத் திமிருக்கு எதிராக அடக்கியே வாசிக்கிறது.




தங்களது நிலத்தையும், நீரையும் மாசுபடுத்தும் கோக்கை இந்தியாவில் இருந்தே துரத்தியடிக்கக் கோரி, உ.பி.யின் பாலியா மாவட்டத்திலுள்ள சின்ஹாசாவர் கிராம மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்ட பேரணி. (கோப்புப் படம்).

இடதுசாரிக் கூட்டணியின் கையில் அதிகாரம் இருந்தால், பன்னாட்டு நிறுவனங்களின் ஆட்டத்திற்கு ஆப்பு வைத்துவிடுவோம் என சி.பி.எம். உதார்விட்டு வருவதைப் பற்றி புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை. இதோ, கேரள மாநில அதிகாரம் இடதுசாரிக் கூட்டணியின் கையில்தான் இருக்கிறது. அக்கூட்டணி ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக இருந்தால், ''உடனடியாக 200 கோடி ரூபாய் பணத்தை அரசு கஜானாவில் கட்டச் சொல்லி கோக்கிற்கு உத்தரவிட்டிருக்கலாம். அப்படிக் கட்டத் தவறினால், கேரளாவிலுள்ள கோக்கின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்'' என ஒரு வார்த்தைக்காகவாவது மிரட்டல் விட்டிருக்கலாம். நிபுணர் குழுவின் பரிந்துரையையொட்டி கோக் நிர்வாகத்திற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காத சி.பி.எம். கூட்டணி ஆட்சி, ஒப்புக்குச் சப்பாணியாக, அதே பாலக்காடு மாவட்டத்தில் இயங்கிவரும் பெப்சி ஆலை நிர்வாகத்திடம், ''இனி, 7 இலட்சம் லிட்டர் நீருக்குப் பதிலாக, 2.34 இலட்சம் நீரைத்தான் நிலத்தடியிலிருந்து எடுத்துப் பயன்படுத்த வேண்டும்'' என உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவைக் கேட்டு பெப்சி நிர்வாகம் ஆடிப் போய்விடும் என்பதற்கு ஏதாவது உத்தரவாதம் உண்டா? பிளாச்சிமடாவில் உள்ள கோக் ஆலைகூட ஒவ்வொரு நாளும் 5 இலட்சம் லிட்டர் நீரைத்தான் நிலத்தடியில் இருந்து எடுத்துப் பயன்படுத்த வேண்டும் என அரசிடம் அனுமதி பெற்றிருந்தது. ஆனால், கோக் நிர்வாகமோ ஒவ்வொரு நாளும் 15 இலட்சம் லிட்டருக்கும் மேலாக நீரை உறிஞ்சி எடுத்துப் பயன்படுத்தி வந்தது. கடந்த பத்தாண்டுகளில் இந்தத் தண்ணீர் திருட்டுக்காக கோக் நிர்வாகம் ஒருமுறையேனும் தண்டிக்கப்பட்டதுண்டா?

பிளாச்சிமடா மக்களின் போராட்டத்திற்குக் கிடைத்த இந்த வெற்றியைச் செயல்படுத்த வேண்டும் என்றால் கூட, கோக்கிற்கு எதிராக நடந்துவரும் இப்போராட்டத்தை இன்னும் தீவிரமாக நடத்த வேண்டியிருக்கும். ஏனென்றால், கோக்கின் பண பலமும் அரசியல் செல்வாக்கும் பாதாளம் வரை பாயக்கூடியது. இதற்கு ஆதாரமாக கடந்த பத்தாண்டுகளில் நடந்த பல சம்பவங்களை உதாரணமாகக் காட்டலாம்.

கோக்கின் செயல்பாடுகளால் நிலத்தடி நீர் மாசடைவதைக் கண்ட பிளாச்சிமடா பஞ்சாயத்து ஒன்றியம், கோக்கின் ஆலை செயல்படுவதற்குத் தடை விதித்தது; கேரள மாநில அரசைக் கொண்டே இந்தத் தடையை உடைத்தெறிந்தது, கோக். இதற்கடுத்து, 34 ஏக்கரில் விவசாயம் செய்யும் விவசாயி எந்தளவிற்கு நீரைப் பயன்படுத்துவரோ, அதே அளவு நீரைத்தான் கோக் ஆலையும் பயன்படுத்த வேண்டும் என கேரள உயர்நீதி மன்றத்தின் மூலம் ஒரு தீர்ப்பைப் பெற்றனர், பிளாச்சிமடா மக்கள். இதனையும் கேரள உயர்நீதி மன்றத்தைப் பயன்படுத்தியே உடைத்தது, கோக். பிளாச்சிமடா மக்கள் குடிதண்ணீருக்காகக் குடத்தைத் தூக்கிக்கொண்டு அலைந்து கொண்டிருந்தபொழுதுதான், இப்படிபட்ட தீர்ப்புகளையும், அரசாணையையும் கோக் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரச்சினை பற்றி தலையங்கம் எழுதியுள்ள ''எக்கனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி'' என்ற ஆங்கில வார இதழ், ''பிளாச்சிமடா மக்கள் கடந்த பத்தாண்டுகளாக சட்டபூர்வமாகப் போராடி இந்த வெற்றியை ஈட்டியுள்ளனர். இது நடைமுறைக்கு வரவில்லையென்றால், நீதியைப் பெறுவதற்கு ஜனநாயகத்திற்குப் புறம்பான வழிகளில் மக்கள் போராடத் தொடங்கி விடுவார்கள்'' என ஆட்சியாளர்களை எச்சரித்துள்ளது.

இந்த வரிகளைத் தோலுரித்தால், இந்திய 'ஜனநாயகமும்', அதன் ஆட்சியாளர்களும், ஓட்டுக் கட்சிகளும் எந்தளவிற்குப் பன்னாட்டு நிறுவனங்களின் நலனைப் பாதுகாக்கும் ஏவல் நாய்களாக நடந்து வருகிறார்கள் என்பது அம்பலமாகும். ஆனாலும் என்ன செய்வது? எத்தனை முறை குச்சியை வைத்துக் கட்டினாலும், நாய் வாலை நிமிர்த்திவிட முடியாதே!

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமா? ஏகாதிபத்தியக் கைக்கூலி நிறுவனமா?

## மறுகாலனியாக்கத்திற்கு ஏற்ப விவசாயக் கல்வியும் ஆராய்ச்சியும் மறுவார்ப்பு செய்யப்படுகின்றன.

காலனிய ஆட்சிக் காலத்தில், அன்று பிரிட்டனின் -ற்பாலைகளுக்குப் பருத்தி தேவைப்பட்டது. இத் தேவையை இந்தியாவின் மூலம் நிறைவு செய்வதற்காக, அன்றைய சென்னை மாகாணத்தில் பருத்தி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலியில் 800 ஏக்கரில் பருத்தி விவசாயத்தை சோதனை அடிப்படையில் காலனிய அரசு மேற்கொண்டது. இதன் தொடர்ச்சியாக, சென்னை சைதாப்பேட்டையில் 1868-இல் விவசாயக் கல்லூரியைத் தொடங்கியது. இது, பிரிட்டனுக்குத் தேவையான பருத்தி மற்றும் விவசாயக் கச்சாப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வல்லுநர்களை உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இப்படி காலனியக் கொள்ளைக்காக வெள்ளைக்காரனால் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் கல்லூரிதான், இன்று தமிழ்நாடு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகமாக கோவையில் உருவெடுத்துள்ளது. இன்று மக்கள் வரிப் பணத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் 32 ஆராய்ச்சி நிலையங்கள், 5 பயிர் பாதுகாப்பு நிலையங்கள், 7 பாடசாலை வளாகங்கள், 10 கல்லூரிகள், 16 வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் பல நகர்ப்புறத் தோட்டக்கலை மையங்கள் - என பெரும் வலைப்பின்னலைக் கொண்ட நிறுவனமாய் வளர்ந்துள்ளது.

நவீன அறிவியல் முறைகளைக் கையாண்டு விவசாயத்தையும் உற்பத்தியையும் மேம்படுத்தவும், விவசாயச் செலவுகளைக் குறைக்கவும் இப்பல்கலைக்கழகம் சேவை செய்யும் என்று தமிழக விவசாயிகள் நம்பிக்கை கொண்டிருந்தனர். அந்த நம்பிக்கைகள் அனைத்தும் கானல் நீராகிவிட்டது. இப்படி மக்களின் வரிப்பணத்தை கோடிகோடியாகப் பெறும் இப்பல்கலைக்கழகம் யாருக்காகச் சேவை செய்கிறது?

இப்பல்கலைக்கழகம் தமிழக விவசாயிகளுக்காக அல்லாமல், தரகுப் பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு முதாலாளிகளுக்காகவே பல்வேறு கள மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2004-ஆம் ஆண்டில் விரிவாக்கக் கல்வி இயக்குநர் வடிவேலு தலைமையில் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ‘‘துல்லிய பண்ணைத் திட்டம்’’ என்ற பெயரில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத் திட்டத்தில் விவசாயிகள் குழுக்களாக அணிதிரட்டப்பட்டனர். இப்படி அமைக்கப்பட்ட குழுக்கள் விவசாய இடுபொருள் நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டன. இக்குழுக்களுக்கு நகர்ப்புற மேட்டுக்குடிகளின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் நோக்கிலும், ஏற்றுமதிக்கான விவசாயத்தை மேற்கொள்ளவும் பயிற்சி அளிக்கப் படுகிறது. இப்படிப்பட்ட விவசாயத்தை ‘‘உயர் மதிப்பு விவசாயம்’’ (High Value Agriculture - HVA) என்று அழைக்கின்றனர்.

மறுபுறம், உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்வது என்ற பெயரில் சில்லறை வியாபார நிறுவனங்களுடன் இத்திட்டம் இணைக்கப்பட்டது. இதில் ரிலையன்ஸ் பிரஷ், பாரதி, ஆதித்யா பிர்லா முதலான தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் பங்கேற்றன. இந்த ஏற்பாடுகள் அனைத்தும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஏகபோக கம்பெனிகளுக்கு இடுபொருட்களுக்கான சந்தையைக் கைப்பற்றவும் உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்யவும் ஏதுவாக அமைந்தன. இந்த ஏற்பாட்டை ‘‘தருமபுரி மாதிரி’’ துல்லிய பண்ணைத் திட்டம் என்று குறிப்பிடுகின்றனர். சுருக்கமாகக் கூறினால் ‘‘ஏர் கலப்பை முதல் உணவுத் தட்டு வரை’’ அனைத்தையும் ஒருங்கிணைத்துக் கொள்ளையடிப்பது தான் துல்லிய பண்ணைத் திட்டத்தின் நோக்கமாகும்.



கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம்: ஏகாதிபத்தியக் கைக்கூலி நிறுவனம்.

இக்கள ஆய்வின் வழியாக கிடைத்த அனுபவத்தை வைத்து 28 மாவட்டங்களில் ஏறத்தாழ 34000 ஹெக்டர்



படிப்பகம்

பரப்பளவில், தரகு மற்றும் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் தேவைக்கு ஏற்ற வகையில் விவசாயம் மறுவார்ப்பு செய்யப்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழகம் தமிழகம் முழுவதும் மாவட்டந்தோறும் மா, வாழை, திராட்சை, கொய்மலர் விவசாயிகளை சங்கங்களாக ஒருங்கிணைத்து வருகிறது. இதற்காக அமெரிக்க நிதி உதவி (USAID) என்ற அமைப்பு, இந்திய-அமெரிக்க விவசாய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிதி உதவி செய்துள்ளது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் பெருமுதலாளித்துவ நிறுவனங்களுக்குத் தேவையான விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யவும், அவற்றை அந்நிறுவனங்கள் நேரடியாகக் கொள்முதல் செய்யவுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகமும் இந்தியாவின் மகிகோவும் (அமெரிக்க ஏகபோக விதைக் கம்பெனியான மான்சாண்டோவின் துணை நிறுவனம்) இணைந்து தமிழ்நாடு வேளாண் அறிவியல் பல்கலைக் கழகத்தில் மரபணு மாற்ற கத்தரியில் (பி.டி. கத்திரியில்) ஆய்வுகள் நடத்துகின்றன. இதற்கும் அமெரிக்க நிதி உதவி (USAID) அமைப்பு, இந்திய-அமெரிக்க விவசாய ஒப்பந்தம் அடிப்படையில் நிதி உதவி செய்கிறது. மக்களிடமும் ஆராய்ச்சியாளர்களிடமும் பி.டி பயிர்களுக்கு ஆதரவான சூழலை உருவாக்குவதற்காகவும், பி.டி பயிர்களை விவசாயத்தில் திணிப்பதற்காகவும் இப்பல்கலைக்கழகம் முழு மூச்சாகச் செயல்படுகிறது.

இந்தத் திட்டம், தாவர மூலக்கூறு உயிரியல் மையத்தின் முன்னாள் இயக்குநர் பாலசுப்பிரமணி தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது, அமெரிக்காவின் ராக்பெல்லர் பவுண்டேசன் மற்றும் பிற ஏகபோக நிறுவனங்களுடன் நெருங்கிய உறவு கொண்ட சாமியப்பன் இதை முன்நின்று நடத்துகிறார். இன்னொரு பக்கம், பயிர் இனவிருத்தி மற்றும் மரபியல் மையத்தின் இயக்குநர் தியாகராஜன் தலைமையில் பன்னாட்டு நிதி உதவியுடன் மரபணுப் பயிர்கள் பற்றிய ஆராய்ச்சிகள் நடக்கின்றன. மேலும், முன்னாள் துணை வேந்தர் இராமசாமி, பேராசிரியர் செல்வராஜ் (விவசாயப் பொருளாதார துறை) போன்றோர் மான்சாண்டோவின் விற்பனைப் பிரதிநிதிகள் போல் செயல்படுகிறார்கள். இதை இந்நாள் துணைவேந்தர் பூபதி முருகேசன் வழிமொழிந்து வருகிறார். சுருக்கமாகச் சொன்னால், பலவகையான ஆய்வுகள் நடக்கின்றன. பல வகையான ஏகாதிபத்திய கைக்கூலிகளும் உருவாகியுள்ளனர்.



காட்பரி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்: வேளாண் பல்கலைக்கழகத்தின் மறுகாலனியாதிக்கச் சேவை.

அதேசமயம்,அறிவியல் பூர்வமான ஆய்வுகளின் அடிப்படையில், காய்ப்புழு எதிர்ப்புத் திறன் கொண்டதாகப் பீற்றிக்கொள்ளப்பட்ட பி.டி பருத்தி, புழக்கத்தில் வந்த சில ஆண்டுகளிலே எதிர்ப்புத் திறனை இழந்துவிட்டது. இந்த உண்மையை அண்மையில் மான்சாண்டோவே ஒப்புக் கொண்டுள்ளது (ஆதாரம்: இந்து நாளேடு, 6.03.2010). மேலும், பருத்தி விவசாயத்தில் மந்தமாக இருந்த மாவுப்பூச்சியின் தாக்கம் வலுவடைந்து பருத்தி மற்றும் பிற பயிர்களில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

இருப்பினும், இப்பல்கலைக்கழகம் பி.டி. கத்திரி மட்டுமின்றி, நெல், நிலக்கடலை, பப்பாளி, தக்காளி, கரும்பு, மக்காசோளம், மரவள்ளிக் கிழங்கு ஆகிய வற்றிலும் மரபணு மாற்றத்திற்கான ஆய்வுகளைச் செய்து வருகிறது. இப்பல்கலைக் கழகத்தில் மரபணு ஆராய்ச்சிகளின் திசைவழியை நேரடியாகவும் மறைமுகமாகவும் தீர்மானிப்பது தமிழக விவசாய அமைச்சகம் அல்ல; மாறாக அமெரிக்க நிதி உதவி, ராக்பெல்லர் பவுண்டேசன் போன்ற பன்னாட்டு ஏகபோக அமைப்புகள்தான். இப்பல்கலைக்கழகம் பேயர், சைன்ஜென்டா, டூபாண்ட், டவ், கேட்பரி இந்தியா போன்ற பன்னாட்டு ஏகபோக நிறுவனங்

மறுகாலனியாக்கத்திற்கு ஏற்ப ஒரு மறுவார்ப்பு: கார்னெல் பல்கலைக்கழகத்துடன் மரபணு மாற்றுப் பயிர் திட்டத்துக்கான ஒப்பந்தமிட்டுக் கொண்டாடும் வேளாண் பல்கலைக்கழக அறிஞர்கள்.



www.padippakam.com

களுக்கும் தரகுப் பெருமுதலாளிகளுக்கும் தேவையான ஆய்வுகளைப் பணம் வாங்கி கொண்டு செய்து கொடுக்கிறது.

ஒப்பந்த விவசாயத்தின் அடிப்படையில், கேட்பரி இந்தியா நிறுவனம் தமிழகத்தில் கோக்கோ விவசாயத்தை மேற்கொண்டு வருகிறது. அந்நிறுவனத்திடம் ரூ.50 இலட்சம் வாங்கிக்கொண்டு தமிழகத்திற்கு ஏற்ற கோக்கோ ரகத்தை உருவாக்கித் தர இப்பல்கலைக்கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் இராஜாமணி என்பவர் தலைமையில் நடக்கிறது. இதே போல், மான்சாண்டோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆறுமுகசாமி என்பவர் தலைமையில் பி.டி மக்காசோளம் செயல்திறன் பற்றிய ஆய்வு நடக்கிறது.




தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோளத்தை அறிமுகப்படுத்துவதைக் கண்டித்து தமிழ்நாடு வணிகர் சங்கமும், விவசாய சங்கங்களும் இணைந்து கடந்த ஆண்டு கோவையில் நடத்திய ஊர்வலம். (கோப்புப் படம்).

1961-இல் இப்பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக விவசாயப் பொருளாதாரத் துறை தொடங்கப்பட்டது. இத்துறை போர்டு, ராக்பெல்லர் பவுண்டேசன், வின்ராக் இன்டர்நேசனல், சுவீடன் பன்னாட்டு வளர்ச்சிக் குழுமம், பன்னாட்டு நெல் ஆராய்ச்சி கழகம் மற்றும் உலக வங்கியுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. இங்கு பணியாற்றும் வல்லுனர்களில் பெரும்பான்மையானோர் பவுண்டேசனின் நிதி உதவியுடன் வெளிநாடுகளில் பல்வேறு பயிற்சிகள் மற்றும் பட்டங்கள் பெற்றவர்கள் ஆவார்கள். இத்துறை, தமிழக அரசின் விவசாய திட்டங்களை வடிவமைப்பதிலும் கொள்கை ரீதியான முடிவு எடுப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மத்திய - மாநில திட்டக் கமிஷனிலும் செல்வாக்கு செலுத்துகிறது.

பொதுவாக இப்பல்கலைக்கழகத்தில், பன்னாட்டு அமைப்புகளுடன் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு சன்மானங்களைப் பெற்று, அவற்றுக்குத் தேவையான வேலையை முடித்துக் கொடுப்பவர்களே 'அறிவாளி'களாகவும் 'திறமைசாலி'களாகவும் கருதப்படுகிறார்கள்; அவர்களுக்குப் பதவி உயர்வும், சலுகைகளும் சன்மானங்களும் வாரியிறைக்கப்படுகின்றன. இதனால் இப்பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் - ஆய்வாளர்கள் மத்தியில், பன்னாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு வைத்து அவற்றுக்கு எட்டப்பன் வேலை செய்வதற்குக் கடும் போட்டியும் குடுமிபிடிச் சண்டையும் நடக்கிறது.

இப்பல்கலைக்கழகம் போர்டு, ராக்பெல்லர் பவுண்டேசன் முதற்கொண்டு 45-க்கும் மேற்பட்ட பன்னாட்டு அமைப்புகளுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. 2004 - 2005-இல் மட்டும் 45 ஆராய்ச்சிக்குப் பன்னாட்டு அமைப்புகளிடமும், 107 ஆராய்ச்சிக்குத் தனியார் ஏகபோக முதலாளிகளிடமும் நிதி வாங்கியுள்ளது. (ஆதாரம்: 100-வது ஆண்டு மலர்). இவற்றில், அமெரிக்கா நிதி உதவி நிறுவனம் மட்டுமே சுமார் 8 கோடி ரூபாய் கொடுத்துள்ளது (ஆதாரம்: Frontline, July 02-15, 2005). ஒட்டுமொத்தமாகவே இப்பல்கலைக்கழகம் ஏகாதிபத்திய நாடுகளின் நிதியமைப்புகள் மற்றும் நிறுவனங்களுடன் உறவு கொள்வதையும் அவற்றுக்குச் சேவை செய்வதையும் தனது அறிவிக்கப்படாத கொள்கையாகவே கொண்டுள்ளது.

மறுபுறம், இப்பல்கலைக்கழகம் கோடானுகோடி மக்களின் வாழ்வாதாரமாக இருக்கும் விவசாயத்திற்கான வல்லுனர்களை உருவாக்கும் பணியை அறவே கைவிட்டுவிட்டது. உலகமயத்தின் தொடர்ச்சியாக விவசாயத்திலும் விவசாயம் சார்ந்த தொழில்களிலும் தரகு மற்றும் பன்னாட்டு முதலாளிகளின் ஆதிக்கம் வளர்ந்து வருகிறது. சங்கிலித்தொடர் சில்லறை வியாபாரக் கடைகள், உணவு பதனிடும் தொழில், தொடர் விவசாய இடுபொருள் விற்பனை அங்காடிகள், சேமிப்புக் கிடங்கு சேவை, ஒப்பந்த விவசாயம் போன்றவை முன்னுக்கு வந்து கொண்டிருக்கின்றன. இவற்றைக் கணக்கில் கொண்டு இப்பல்கலைக்கழகம் உணவு பதனீடு தொழிற்பட்டம், விவசாய முன்பேர வர்த்தகம், விவசாய வர்த்தக மேலாண்மை போன்ற புதிய துறைகளில் பட்டதாரிகளை உருவாக்குகிறது. அதாவது, உலகமயத்திற்கு ஏற்ப விவசாயக் கல்வி மறுவார்ப்பு செய்யப்படுகிறது. இந்தப் பட்டதாரிகளைக் கொண்டு தரகு மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுடைய தேவையை நிறைவு செய்து கொள்கின்றன.

இப்பல்கலைக்கழகம் வெள்ளைக்காரன் ஆட்சி காலத்தில் என்ன செய்ததோ, அதையே இன்றைய உலகமயமாக்கச் சூழலில் பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளுக்குச் செய்துவருகிறது. எட்டப்பன்களும் மீர்ஜாபர்களும் அரசியலில் மட்டும் இல்லை. அறிவார்ந்த பல்கலைக்கழகங்களிலும் இருக்கிறார்கள்.

● சுடர்



படிப்பகம்

www.padippakam.com

# நக்சல்பாரி புரட்சி நாயகன் தோழர் கனு சன்யாலுக்கு வீர வணக்கம்!

**மா**பெரும் நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியைக் களத்தில் நின்று, தலைமையேற்று வழிநடத்தியவரும், கனு சன்யால் என்று பிரபலமாக அறியப்பட்டவரும், கனுபாபு என்று அன்புடனும் புரட்சிகர மரியாதையுடனும் அழைக்கப்பட்டவருமான கிருஷ்ணகுமார் சன்யால் கடந்த மார்ச் 23-ஆம் நாள் நக்சல்பாரி என்று சிறு நகருக்கு அருகே உள்ள ஹட்டிகிசா கிராமத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இச்செய்தி கேட்டு நெஞ்சில் வலியும் வேதனையும் அடையும் இலட்சக்கணக்கான நக்சல்பாரி புரட்சியாளர்களோடு நாமும் இணைந்து கனுபாபுக்கு வீர அஞ்சலி செலுத்துகிறோம்.

இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க புரட்சியைத் தொடங்கி வைத்த கனுபாபு, மண் சுவரும் ஓலைக் கூரையும் கொண்ட சிறு குடிசையிலேயே வாழ்ந்து மடிந்தார். ‘‘அங்கே தரையிலே கிழிந்த பாயும், சில மக்கிய போர்வைத் துண்டுகளுமே கிடந்தன, சில புத்தகங்களும், துணிகளும், பாத்திரங்களுமே அவருக்கென இருந்தன. அந்த மண் சுவரில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரின் கருப்பு வெள்ளை புகைப்படங்களின் சட்டகங்களே தொங்கின’’ என்று அவரது மரணத்தை அறிவித்த பத்திரிக்கையாளர் குறிப்பிடுகிறார். தனது வாழ்க்கை முழுவதையும் மார்க்சியம் - லெனனியம் - மாவோ சிந்தனை என்ற சித்தாந்ததுக்கு அர்ப்பணித்த அம்மாபெரும் நக்சல்பாரி நாயகனின் எளிய வாழ்க்கையை அது சித்தரிக்கிறது.



மூளையில் இரத்தக் குழாய் வெடித்து, இரத்தக் கசிவு ஏற்பட்டதால், கடந்த ஓராண்டாகவே தான் வாழ்ந்த குடிசைக்கு வெளியேகூட நடமாட முடியாமல் முடங்கிக் கிடந்தார். இருந்தபோதும் கல்கத்தா கொண்டு சென்று அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு மறுத்தார். இந்த அரசுக்கு எதிராகப் போராடும் தான் அதனிடம் மருத்துவ உதவி பெறுவது கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். ‘‘நான் ஒரு காலத்தில் மக்கள் ஆதரவு பெற்ற பிரபலமானவனாக இருந்தேன். இப்போது மக்கள் ஆதரவின்றி உள்ளேன். நோயுற்றும் உள்ளேன். அதனால் இனி மேலும் மக்களைத் திரட்டி அமைப்பாக்க முடியாமல் போயுள்ளேன்’’ என்று தனது இறுதிப் பேட்டியில் வேதனையை வெளிப்படுத்தினார் என்று அறிகிறோம். அவரது தற்கொலைக்குப் பலரும் பலவாறு கற்பிதங்களைச் செய்தபோதும், குறிப்பாக இதை வைத்து எதிரிகள் நக்சல்பாரி இயக்கத்தை இழிவுபடுத்திய போதும், இறுதி மூச்சு வரை போர்க்குணமிக்கவராகவே வாழ்ந்திருக்கிறார். எதிரிகள் பிரச்சாரம் செய்வதைப் போல, புரட்சியின் மீது அவநம்பிக்கையுற்று கனுபாபு தற்கொலை செய்து கொள்ளவில்லை. நோயின் வேதனை - வலி காரணமாகவே அவ்வாறு செய்துள்ளார்.

நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியை கனு சன்யாலும் ஜங்கல் சந்தாலும் தலைமையேற்று வழிநடத்தினர். மரபுவழி ஆயுதங்களை ஏந்திய குத்தகை விவசாயிகள் உள்ளூர் நிலப்பிரபுக்களுக்கு எதிராக மாபெரும் எழுச்சி நடத்தி நிலங்களைக் கைப்பற்றினர். துரோகியும் போலீசு மந்திரியுமான ஜோதிபாசு உத்திரவின்படி மே 23 அன்று நக்சல்பாரி கிராமத்தின் மீது போலீசு படையெடுத்தது. ஆயுத பாணிகளான உழவர்கள் எதிர்த் தாக்குதல் தொடுத்து ஒரு போலீசு அதிகாரியைக் கொன்றனர். மிருகத்தனமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட போலீசு, ஆறு பெண்கள், இரண்டு குழந்தைகள் உட்பட 10 விவசாயிகளைச் சுட்டுக் கொன்றது. அப்போதைக்கு அப்பேரெழுச்சியை எதிரிகள் ஒடுக்கிவிட்டபோதும், அடுத்த சில மாதங்களில் நாடு முழுவதும் பலபத்து நக்சல்பாரி பாணியிலான ஆயுதந்தாங்கிய போராட்டங்கள் வெடித்தன. கனுபாபு 1969-ஆம் ஆண்டு, அதாவது லெனினுடைய பிறந்த -ற்றாண்டு, கல்கத்தா தியாகிகள் மைதானத்தில் நடந்த ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற மே நாள் பேரணிக்குத் தலைமையேற்று, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) கட்சி நிறுவப்பட்டதை முறைப்படி பிரகடனப்படுத்தினார். அதன்பிறகு, பல ஆயிரம் நக்சல்பாரிகளைச் சிறை, சித்திரவதை, படுகொலைகள் மூலம் எதிரிகள் அடக்கி ஒடுக்கியபோதும், எவ்வளவோ இழப்புகளைச் சந்தித்த போதும் புரட்சிப் பேரியக்கமாக அது வளர்ந்து நிற்கிறது.

நக்சல்பாரி உழவர் பேரெழுச்சி அனுபவத்தை முதல் தெராய் அறிக்கையில் தொகுத்த கனுபாபு, ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். சாரு மஜூம்தாரின் இடது திசைவிலகலுக்குப் பிறகு, இரண்டாவது தெராய் அறிக்கையில் நக்சல்பாரி பேரெழுச்சியை மீளாய்வு செய்து, அத்தவறுகளை நிராகரித்தார். சாருவின் இடது திசைவிலகல் காரணமாக இயக்கம் பின்னடைவு-பிளவுக்குள்ளான போது, 1970-களின் ஆரம்பத்தில் சிறையிலிருந்த பிற ஐந்து முக்கிய தோழர்களோடு இணைந்து, கட்சியின் தவறுகளைக் களைந்து, ஐக்கியப்பட்டுப் புரட்சியை முன்னெடுக்கும்படி அறைகூவல் விட்டார்.

ஏழாண்டுகள் சிறைத்தண்டனை முடிந்து 1970-களின் இறுதியில் விடுதலையான கனுபாபு, பிளவுபட்டிருந்த நக்சல்பாரி குழுக்களை ஐக்கியப்படுத்தும் முயற்சிகளில் ஒன்றாக கம்யூனிசப் புரட்சியாளர்களின் அமைப்புக் கமிட்டியை அமைத்தார். ஐக்கியம், பிளவு, மீண்டும் ஐக்கியம் என்று சில அமைப்பு முயற்சிகளில் ஈடுபட்டார். இத்தகைய முயற்சிகளினூடாக வலது விலகல் தவறையும் செய்தார். தனது சகாவான ஜங்கல் சந்தாலைத் தேர்தலில் நிறுத்தித் தோல்வியும் அடைந்தார். இருந்தபோதும் உள்ளூர் பிரச்சினைகளில் மக்களைத் திரட்டுவதை அவர் கைவிடவில்லை. குறிப்பாக சிலிகுரி, ஜல்குரி வட்டாரத்தில் விவசாயிகளையும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களையும் அமைப்பாகி சில இயக்கங்களை நடத்தினார். ஏகாதிபத்திய நலன்களுக்காக மேற்கு வங்க இடதுசாரி முன்னணி அரசு பின்பற்றிய தொழில்மயமாக்கக் கொள்கைகளை, குறிப்பாக சிங்கூர், நந்திகிராம நிலப் பறிப்புகளுக்கு எதிராகக் கடுமையாக விமர்சனம் செய்து வந்தார். சாருவின் இடது திசைவிலகலை நிராகரித்த அதேசமயம், கனுசன்யால் மாற்று மக்கள் திரள் புரட்சிகர வழியை வகுப்பதில் வெற்றி பெறவில்லை என்றாலும், கனுபாபுவை வலது சந்தர்ப்பவாத சகதிக்குள் வீழ்த்த சில போலி புரட்சியாளர்கள் செய்த முயற்சியை இறுதிவரை எதிர்த்தார் என்பதுதான் உண்மை.

— ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# இராணுவச் செலவு அதிகரிப்பு: நாட்டு மக்களைப் பாதுகாக்கவா?

**இந்தியாவின் வெறிபிடித்த ஆயுதக் குவிப்பின் பின்னே, அதனின் பிராந்திய மேலாதிக்க நோக்கங்கள் மறைந்துள்ளன.**

நிதியமைச்சர் அண்மையில் சமர்ப்பித்த பட்ஜெட்டில், இந்திய இராணுவத்திற்காக ஒதுக்கப்படும் தொகை ரூ.1,47,344 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டை ஒப்பிடும்போது, இது 8.13 சதவீதம் அதிகம். ''பாதுகாப்பான எல்லைகள், பாதுகாப்பான வாழ்க்கை என்பதுதான் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும். எனவேதான் இராணுவச் செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது'' என்று இப்பூதாகரச் செலவை நியாயப்படுத்துகிறார், நிதியமைச்சர்.

அனைத்து தெற்காசிய நாடுகளின் இராணுவச் செலவுகளை விட, பலமடங்கு அதிகமாக இந்திய அரசு தனது இராணுவத்துக்கு வாரியிறைக்கிறது. ஏற்கெனவே 2009-ஆம் ஆண்டில் இந்தியாவின் இராணுவச் செலவு 28.2 சதவீதம் அதிகரிக்கப்பட்டது. இப்போது மேலும் அதிகரிப்பு. இதேவேகத்தில் போனால் இன்னும் பத்தாண்டுகளில் இந்தியாவின் இராணுவச் செலவுகள் ரூ.10,00,000 கோடியாக அதிகரிக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

ஆயுத விற்பனையை நோக்கமாகக் கொண்டு பயணம் அமைக்கப்படவில்லை என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்த போதிலும், அண்மையில் அமெரிக்க அரச் செயலரான ராபர்ட் கேட்ஸ் டெல்லிக்கு வந்து சென்ற பிறகு, இந்தியா தனது இராணுவச் செலவுகளைப் பலமடங்கு உயர்த்தத் தீர்மானித்துள்ளது. அதாவது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% ஆக இராணுவச் செலவுகள் உயர்த்தப்பட்டுள்ளன.

இன்று உலகில் பெருமளவு ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா மாறியுள்ளது. துப்பாக்கிகள், குண்டுகள், ஏவுகணைகள், ராடர் சாதனங்கள் என இந்தியா இராணுவ ரீதியில் தொடர்ந்து தன்னை வலுப்படுத்திக் கொண்டே வந்துள்ளது. அளவிலும் ஆற்றலிலும் ஆக்கிரமிப்புப் போருக்கான தயார் நிலையில் இந்திய இராணுவம் வலுவான நிலையில் கட்டியமைக்கப்பட்டுள்ளது.




இப்படி கோடிகோடியாகக் கொட்டி இந்திய அரசு ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதன் காரணம் என்ன? யாருடைய தாக்குதலிலிருந்து யாரைப் பாதுகாக்க இவ்வளவு செலவிடப்படுகிறது?

குறிப்பாக, அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டபின், அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரிலான ஆக்கிரமிப்புப் போர்களை இந்தியா ஆதரித்து நிற்கின்றது. அனைத்துலக அரங்கிலும், தெற்காசியப் பிராந்தியத்திலும் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார, இராணுவ மாற்றங்களைத் தொடர்ந்து, அமெரிக்காவுடனான இந்தியாவின் இராணுவ உறவுகள் வலுப்பட்டதோடு, அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம், அணுசக்தி ஒப்பந்தம் ஆகியன அரங்கேறின. மேலும், இந்தியாவை வல்லரசாக்கப் போவதாக அறிவித்ததன் மூலம், அமெரிக்கா தெற்காசியாவில் தனது நம்பகமான அடியாளாக இந்தியாவை அங்கீகரித்தது. அமெரிக்க மேலாதிக்க வல்லரசின் போர்த்தந்திர நோக்கத்திற்கேற்ப, அதன் ஓர் அங்கமாகவே இந்திய துணை வல்லரசின் இராணுவமும் நவீன முறையில் ஆற்றல்மிக்கதாகக் கட்டியமைக்கப்படுகிறது.

இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் நேபாளம், இலங்கை, பூடான், மாலத்தீவு, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், மியான்மர், பாகிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளில் மேலாதிக்கம் செய்வதில் குறியாக உள்ளனர். இப்பிராந்தியத்தில் போட்டியிடும் இதர நாடுகளை எதிர்கொண்டு பொருளாதார ரீதியாகச் செல்வாக்கு செலுத்துவதோடு மட்டுமின்றி, இராணுவ பலத்தோடு அதனைத் தக்கவைத்துக் கொள்ளவும் விழைகின்றனர்.

இலங்கையில் இராணுவ ரீதியாகத் தலையிட்டு ஈழப் போரை வழிகாட்டி நடத்தியது, இந்தியா. ஏற்கெனவே மாலத்தீவிலும் வங்கதேசத்திலும் பூடான் மற்றும் ஆப்கானிஸ்தானிலும்



படிப்பகம்

www.padippakam.com

இந்தியா தலையிட்டது. நேபாள இராணுவத்தின் மீது தனது மேலாதிக்கத்தையும் கட்டுப்பாட்டையும் திணித்தது. தெற்காசியப் பிராந்தியத்தில் கேள்விமுறையற்ற இந்திய மேலாதிக்கத்தை நிறுவுவதே இவற்றின் நோக்கம்.

வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடல் உள்ளிட்டு, சிங்கப்பூர் அருகிலுள்ள மலாக்கா நீர்ப்பிரிவினையிலிருந்து ஏடன் வளைகுடா வரை, அதாவது செங்கடல் நுழைவு வரை தனது இயற்கையான சாம்ராஜ்ஜிய எல்லையாக இந்தியா கருதுகிறது. ஏகாதிபத்திய வல்லர களின் ஆசியுடன் இப்பிராந்தியத்தின் போலீ வேலையை - ரோந்து ற்றிக் கண்காணிக்கும் வேலையைத் தானாகவே இந்திய கப்பற்படை மேற்கொண்டு வருகிறது. இந்திய வான்படையோ, பாதுகாப்பான வர்த்தகத்தை நிலைநாட்டுவது என்ற பெயரில் சோமாலியாவில் கடற்கொள்ளையர்கள் எனப்படுவோர் மீது தாக்குதலை நடத்தியது.

இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் தெற்கு மற்றும் தென்கிழக்காசியா மட்டுமின்றி, மத்திய ஆசிய நாடுகள் மற்றும் தெற்கு ஆப்பிரிக்க நாடுகளிலும் முதலீடு செய்துள்ளனர். தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து இந்தியா வரை சாலை மற்றும் இரயில் பாதை அமைக்கும் மிகப் பெரிய முதலீட்டுத் திட்டத்தில் இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் இறங்க முயற்சித்து வருகின்றனர். பொருளாதார ரீதியாக தென்கிழக்காசியாவில் சீனாவுடன் இந்தியா போட்டியிட வேண்டியுள்ளது. ஆப்கானில் பாகிஸ்தானின் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கேற்ப இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளின் முதலீடுகளும் கைப்பற்றுதல்களும் எந்த அளவுக்கு அதிகரிக்கின்றதோ, அந்த அளவுக்கு இந்தியாவின் இராணுவ விரிவாக்கமும் அதிகரிக்கின்றது.

அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் முதலான ஏகாதிபத்திய வல்லர களும், வளர்ந்துவரும் பொருளாதாரங்களாகச் சித்தரிக்கப்படும் சீனா மற்றும் இந்தியா ஆகியவையும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் தமது நலன்களுக்காக கூட்டுச் சேர்வதும் போட்டியிடுவதுமாக உள்ளன. எண்ணெய் வளமிக்க மத்திய ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவை அவை குறிவைத்துள்ளன.

உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவோ சீனாவைத் தனது போட்டியாளராகக் கருதுகிறது. சீனாவைச் ற்றிவளைக்கும் தனது உலக மேலாதிக்கப் போர்த் திட்டத்தில் இந்தியாவைத் தனது பங்காளியாக நியமித்துக் கொண்டுள்ளது. இந்தியாவோ, சீனா மற்றும் பாகிஸ்தான் கூட்டை தனது மேலாதிக்க நோக்கங்களுக்கு எதிரானதாகக் கருதுகிறது. இதன்படியே, சீன எதிர்ப்பு தேசியவெறி கிளறிவிடப்பட்டு வருகிறது.

தமது விரிவாக்க மேலாதிக்க நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் பொருளாதார நலன்களைத் தக்க வைத்துக் கொள்ளவும் இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் அமெரிக்காவுடனான கூட்டணியில் நிற்க விரும்புகின்றனர். தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒரு கருவியாக போர்த்தயாரிப்பு செய்வது, ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போர்களில் அமெரிக்கத் தரப்பை ஆதரித்து இந்தியாவும் பங்கேற்பது என்ற திட்டத்துடன்தான் இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் ஆயுதக் குவிப்பையும் இராணுவத்தை வலுப்படுத்துவதையும் மேற்கொள்கின்றனர். இதையே ‘‘வளர்ச்சி’’ என்றும் ‘‘நாட்டின் பாதுகாப்பு’’ என்றும் ஆட்சியாளர்களும் ஏகாதிபத்திய எடுபிடிகளும் சித்தரிக்கின்றனர்.



அமெரிக்காவின் அடியாள் வேலைக்குப் பிராந்திய மேலாதிக்க வல்லரசான இந்திய அர உருவாக்கியுள்ள அதிநவீன போர்க் கப்பல் ஐ.என்.எஸ்.ஷிவாலிக்.

இவை மட்டுமின்றி, பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் அமெரிக்க ஆசியுடன் இஸ்ரேலும் இந்தியாவும் வெளிப்படையாகவே கூட்டுச் சேர்ந்துள்ளன. பாகிஸ்தான் மற்றும் சீனாவைக் குறிவைத்து தெற்காசியாவில் இந்தியாவும், இரான் மற்றும் சிரியாவைக் குறிவைத்து மேற்காசியாவில் இஸ்ரேலும் ஆயுதக் குவிப்பை நடத்தி வருகின்றன.

இவை அனைத்தும் இந்தியாவானது அமெரிக்க ஆசியுடன் தெற்காசியாவில் போர் வெறிபிடித்த மேலாதிக்கத் துணை வல்லரசாக வலுப்பெற்று வருவதை நிரூபித்துக் காட்டுகின்றன. ஐ.நா.மன்றத்தின் மனிதவள மேம்பாட்டுப் பட்டியலில், உலகின் 182 நாடுகளில் 134-வது இடத்தில் இருக்கும் ஏழை நாடான இந்தியா, இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ 31 சதவீதம் பேர் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 50 ரூபாய்க்கும் குறைவான தொகையையே கூலியாகப் பெறும் நிலையிலுள்ள நாடான இந்தியா, தெற்காசியாவின் வல்லரசாவதை ‘‘வளர்ச்சி’’ என்றும் நாட்டின் பாதுகாப்பு என்றும் முதலாளித்துவ எடுபிடிகள் துதிபாடுகின்றனர். ஆனால் இந்த ‘‘வளர்ச்சி’’யானது, உள்நாட்டில் மக்கள்திரள் இயக்கங்களை ஒடுக்கி மூலவளங்களை ஏகபோக முதலாளிகள் சூறையாடுவதற்கான வளர்ச்சி! தெற்காசியாவிலுள்ள நாடுகளுக்கும் மக்களுக்கும் புரட்சிகர இயக்கங்களுக்கும் எதிரான அச் றுத்தும் வளர்ச்சி!

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com



# முதலாளித்துவப் பயங்கரவாதத்திற்கு எதிராகக்
# குலுங்கியது புதுச்சேரி!

தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள், வழக்குரைஞர்கள் என அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வுரிமையும் பறிக்கப்படும் காலமிது. பன்னாட்டு-இந்நாட்டு (தரகு) முதலாளிகளின் இலாப வெறிக்காக மக்களின் வாழ்வுரிமைகளைப் பறித்து வருகிறது, காங்கிர அர . தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற பெயரில் மறுகாலனியாதிக்கத்தைத் தீவிரப்படுத்தி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர் தினமான மே நாளில் முதலாளித்துவ பயங்கரவாதத்திற்கு எதிராக புதுச்சேரியில் பேரணி-பொதுக்கூட்டம் நடத்த ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு. - பு.ஜ.தொ.மு. - பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் சார்பில் திட்டமிடப்பட்டது.

புதுச்சேரி காவல்துறையிடமிருந்து அதற்காக எழுத்துப்பூர்வமான அனுமதியும் பெறப்பட்டது. மார் ஒரு மாத காலம் தமிழ்நாடு - புதுச்சேரி முழுவதும் பல்லாயிரம் பிர ரங்கள், பல -று வரெழுத்துக்கள், எண்ணற்ற தெருமுனைக் கூட்டங்கள், ஆலைவாயிற்க் கூட்டங்கள் என விரிவான அளவில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பிரச்சாரம் செய்த இடங்களிலெல்லாம் மக்கள் திரளாக நின்று தங்களின் ஆதரவை வெளிப்படுத்தினர்.

தமிழகத்தைப் போல புதுச்சேரியில் நக்சல்பாரி அமைப்புகள் காலூன்றி விடக்கூடும் என அஞ்சிய மத்திய உளவுத் துறை, ''இவர்களின் பேரணியில் தடை செய்யப்பட்ட அமைப்பினர் ஊடுருவி, புதுச்சேரியில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்துவார்கள்; சத்தீஸ்கர் போல் புதுச்சேரியையும் மாற்றத் திட்டமிட்டுள்ளார்கள்'' என்று பீதி கிளப்பியது. அதனடிப்படையில், ''பேரணி-பொதுக்கூட்டம் உள்ளிட்ட எல்லா நடவடிக்கைகளும் தடை செய்யப்படுகிறது'' என புதுச்சேரி காவல்துறை (வடக்கு) கண்காணிப்பாளரான சிவதாசன் உத்தரவிட்டார்.

இந்தத் தடையை எதிர்த்தும் மீண்டும் அனுமதி வழங்க உத்தரவிடக் கோரியும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. ஆனால், உயர்நீதி மன்றமோ உளவுத்துறை (IB) யின் உளறலை ஏற்று, ''மறுபடியும் போலீசிடமே இணக்கமாகப் பேசி அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று ஒரு மொன்னையான வழிகாட்டுதலை வழங்கியது.

தொழிலாளர் தினத்தில் பேரணியாய்ச் செல்லவும், கூட்டம் நடத்தவும், கோரிக்கைகளுக்காகப் போராடுவதும் தொழிலாளர்களின் பிறப்புரிமை. இது உலகம் முழுவதும் ஏற்கெனவே நிலைநாட்டப்பட்டு விட்டது. ஆனால், அத்தகைய உரிமையை மறுத்து, மே தின வாழ்த்துக் கூறி கொண்டே தனது நயவஞ்சக பாசிச குணத்தை அப்பட்டமாகக் காட்டியுள்ளது, காங்கிர .

தொழிலாளர்களின் போராடுகின்ற உரிமையை எந்த கொம்பனாலும் பறிக்க முடியாது என்பதை நிரூபிக்கும் வகையில், பேரணி-பொதுக்கூட்டத்தைத் தடை செய்ததையே வாய்ப்பாகப் பயன்படுத்தி, மாபெரும் மறியல் போராட்டத்தை மே 1 அன்றே நடத்துவதென இப்புரட்சிகர அமைப்புகள் திட்டமிட்டன.

மே நாளன்று காலை முதலே தமிழகம், புதுச்சேரியிலிருந்து அலை அலையாக அணிதிரண்டு வந்தார்கள், இவ்வமைப்புகளின் தோழர்கள். அனுமதி மறுத்திருப்பதால் இவர்கள் அமைதியாகத் திரும்பிச் சென்று விடுவார்கள் என்று எண்ணிக் கிடந்த புதுச்சேரி போலீ க்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது எமது மே நாள் மறியல் போராட்டம்.

செஞ்சட்டை, செம்பதாகை, செங்கொடிகளுடன் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்கள், பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் பறை முழக்கத்தோடு



படிப்பகம்

www.padippakam.com

புதுச்சேரி புதிய பேருந்து நிலையத்தை மறித்து நின்றனர். ஒரு மணி நேரத்திற்கும் மேல் விண்ணதிர முழக்கமிட்டு, செங்கொடிகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இப்போராட்டத்தை கண்டு அதிர்ந்து போன போலீ செய்வதறியாது திகைத்துப் பின் தனது அதிகாரத் திமிரைக் காட்டி மிரட்டி மறியலைக் கலைத்துவிட முயற்சித்தது. ஆனால், தோழர்களின் ஆவேசமான பதிலடியால் அம்முயற்சி பலிக்காது என உணர்ந்த போலீ வேறு வழியின்றி அனைவரையும் கைது செய்வதாக அறிவித்தது.

போலீ, கைது செய்யப்பட்டவர்களை புதுச்சேரி கோரிமேடு போலீ பயிற்சி மைதானத்தில் அடைத்தது. ஆனால், இப்புரட்சிகர அமைப்பின் தோழர்களோ அவ்விடத்தையே பொதுக்கூட்ட மேடையாக மாற்றினர். தலைவர்களின் எழுச்சிமிகு உரைகளும், மைய கலைக் குழுவின் புரட்சிகரப் பாடல்களும் தோழர்களின் போராட்ட உணர்வை மேலும் தட்டியெழுப்புவதாய் அமைந்தன.

மொத்தத்தில் முதலாளித்துவப் பயங்கரவாதத்திற்கு உரிய முறையில் பதிலடி கொடுப்பவர்கள் நக்சல்பாரி புரட்சியாளர்கள் மட்டுமே என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்தது, மே நாளில் நடந்த மறியல் போராட்டம்!

— பு.ஜ. செய்தியாளர், புதுச்சேரி.

# “கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?”

## - தியாகிகள் நினைவிட இடிப்புக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்

அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், 1960-களில் தோழர் சீனிவாச ராவ் தலைமையில் தோழர்கள் வாட்டாக்குடி இரணியன், களப்பால் குப்பு, பூழந்தாங்குடி பக்கிரி, ஜாம்பவானோடை சிவராமன், ஆம்பலாப்பட்டு ஆறுமுகம், மனோன்மணியம்மை என்று சாதிய எல்லைகளைக் கடந்து கம்யூனிசப் போராளிகள் பண்ணையடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடினர். அவர்களின் அளப்பரியத் தியாகத்தால் தஞ்சை மாவட்டம் சிவந்து, கூலி விவசாயிகளின் வாழ்வில் புதிய விடியலை உருவாக்கியது. சவுக்கடியும் சாணிப்பால் கொடுமையும் ஒழிந்தது.

அன்று, பண்ணையார்களின் காங்கிர கட்சியும் அரம் இப்போராளிகளின் தலைக்கு விலைக்கு வைத்து உயிருடனோ பிணமாகவோ ஒப்படைத்தால் பத்தாயிரம் ரூபாய் பரிம் அறிவித்தது. சொந்த சாதிக்காரர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டு இரணியனும் சிவராமனும் போலீசாரால் ட்டுக் கொல்லப்பட்டனர். இரணியனைத் தாங்கிப்பிடித்த ஆறுமுகமும் ட்டுக் கொல்லப்பட்டார். அவர்களின் பிணத்தைக்கூட உறவினர்களிடம் ஒப்படைக்க மறுத்து, பட்டுக்கோட்டை டுகாட்டில் எரித்தது போலீ.

அத்தியாகத் தோழர்கள் எரிக்கப்பட்ட இடத்தில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டு, கம்யூனிசப் பேராசான் தோழர் கார்ல் மார்க்ஸ் பிறந்த நாளும் தியாகிகளின் நினைவுநாளுமான மே 5-ஆம் தேதியன்று பட்டுக்கோட்டை வட்டார மக்கள் அங்கு அஞ்சலி செலுத்தி வந்தனர். அந்தச் டுகாட்டில் மின்சார மயானம் அமைப்பதற்காக, அத்தியாகிகளின் நினைவுச் சின்னத்தை நகராட்சி நிர்வாகம் ஒப்பந்ததாரர் மூலம் அண்மையில் இடித்துத் தள்ளியது. இக்கொடுஞ்செயலை எதிர்த்துப் பொதுவுடமை இயக்கங்களும் பல்வேறு ஜனநாயக சக்திகளும் போராட்டங்களைத் தொடர்ந்தன.

இப்பகுதியில் இயங்கிவரும் வி.வி.மு. இக்கொடுமைக்கு எதிராகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக தஞ்சை மாவட்ட ம.க.இ.க; பு.மா.இ.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகளுடன் இணைந்து 29.3.10 அன்று பட்டுக்கோட்டை பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடத்தத் தீர்மானித்தது. இதற்கு அனுமதி மறுத்த போலீ, வேறு இடத்தில் நடத்தக் கோரியது. திட்டமிட்ட நாளில் அந்த இடத்தில் ஆர்ப்பாட்டத்துக்குத் தோழர்கள் அணிதிரண்ட போது, இது எம்.எல்.ஏ. ரங்கராஜனுக்குச் சொந்தமான இடம் என்று அவரின் அடியாட்கள் தகராறு செய்தனர். ஆர்ப்பாட்டம் நடத்த விடாமல் திட்டமிட்டு தடுக்க முயற்சிக்கும் போலீசின் நயவஞ்சகத்தை எதிர்த்து தோழர்கள் சாலைமறியலில் ஈடுபட்டனர். அரண்டுபோன போலீ, அதன் பின்னரே ஆர்ப்பாட்டத்தை அதே இடத்தில் நடத்த அனுமதித்தது. ‘‘கழுதைக்குத் தெரியுமா, கற்பூர வாசனை? ஓட்டுப் பொறுக்கி பிழைப்புவாதிகளுக்குத் தெரியுமா, கம்யூனிஸ்டுகளின் தியாகம்?’’ என்ற முழக்கங்களுடன் தோழர் மாரிமுத்து தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், கம்யூனிசத் தியாகிகளின் நினைவுச் சின்னத்தை இடித்த கொடுஞ்செயலைக் கண்டித்து முன்னணியாளர்கள் உரையாற்றியதோடு, மீண்டும் புதுப்பொலிவுடன் நினைவுச் சின்னத்தைக் கட்டியமைக்காவிட்டால், மாநிலம் தழுவிய அளவில் போராட்டம் வெடிக்கும் என்று எச்சரித்தனர்.



தியாகிகளின் நினைவுச் சின்னத்தை இடித்த அயோக்கியத்தனத்தை எதிர்த்து தொடரும் போராட்டங்களால் ஆட்சியாளர்கள் அம்பலப்பட்டு தனிமைப்பட்ட நிலையில், தி.மு.க.வின் மைய அமைச்சரான பழநி மாணிக்கம் நடந்த தவறுக்கு வருத்தம் தெரிவித்து, விரைவில் தியாகிகள் நினைவுச் சின்னத்தைக் கட்டியமைக்க உறுதியளித்துள்ளார். வாக்குறுதி பொய்த்தால் மீண்டும் போராட்டம் தொடரும் என்பதையே மக்களின் குமுறல்கள் எச்சரிக்கையாக உணர்த்துகின்றன.

— பு.ஜ.செய்தியாளர், பட்டுக்கோட்டை.



படிப்பகம்

www.padippakam.com

# நிதிச் சூதாட்டத்தால் திவாலானது கிரீஸ்!

**முதலாளித்துவ நெருக்கடி தீரவில்லை; முற்றுகிறது என்பதைத்தான் பல ஐரோப்பிய நாட்டு நிலைமைகள் எடுத்துக் காட்டுகின்றன.**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் வெடித்த பொருளாதார நெருக்கடி பல்வேறு நாடுகளின் வங்கிகள், காப்பீடு நிறுவனங்கள், தொழிற்சாலைகளை விழுங்கி ஏப்பம் விட்டு வருவதோடு மட்டுமின்றி, தேசிய அரசுகளை மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலைக்கும் தள்ளிவருகிறது. துபாய் அரசு, நான்கு மாதங்களுக்கு முன்பாக, தான் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தத் தவணை கேட்டபொழுதுதான் இந்த அபாயம் வெளியுலகுக்குத் தெரியவந்தது. துபாயில் வேலை செய்துவந்த அந்நிய நாட்டுத் தொழிலாளர்களைப் பலியிட்டும், பக்கத்து அரபு நாடுகளிடமிருந்து 'உதவி' பெற்றும் மஞ்சள் கடுதாசி கொடுப்பதில் இருந்து தப்பித்தது, துபாய் அரசு.

நிதியை ஒழுங்காக நிர்வகிக்கத் தெரியாத ஏழை நாடுகள்தான் இப்படிபட்ட அபாயத்தில் சிக்கிக் கொள்ளும் என இதற்கு முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் விளக்கம் அளித்தார்கள். அவர்கள் இந்த சால்ஜாப்பைச் சொல்லி வாயை மூடும் முன்பே, ஐரோப்பாவைச் சேர்ந்த பணக்கார நாடான கிரீஸ் போண்டியாகும் நிலையில் இருப்பது அம்பலமானது.

யாரும் மலைத்துப் போய்விடாதீர்கள். இன்றைய நிலையில் கிரீஸ் அரசின் மொத்தக் கடன் 17,70,000 கோடி ரூபாய். இதில் 70 சதவீதக் கடன் அந்நிய நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அந்நாடு மே 2010-க்குள் 1,18,000 கோடி ரூபாயை அந்நிய முதலீட்டாளர்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

அன்றாட நிர்வாகச் செலவுகளைச் சமாளிப்பதற்கே விமான நிலையங்களையும், நெடுஞ்சாலைகளையும் தனியாரிடம் அடமானம் வைத்துவிட்ட கிரீஸ் அரசு, அவ்வளவு பணத்திற்கு எங்கே போகும்? புதிய கடன் பத்திரங்களை வெளியிட்டு இந்தக் கடனை அடைத்துவிடலாம் என்றால், கிரீஸ் அரசு வெளியிடும் கடன் பத்திரங்களைக் குப்பைகள் என அந்நிய நிதி முதலீட்டு நிறுவனங்கள் அறிவித்துவிட்டன. எனவே, இந்தக் கடனைத் திருப்பி அடைக்க ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த பிற நாடுகள் தனக்கு உதவ வேண்டுமென என கிரீஸ் அரசு கடந்த ஆறேழு மாதங்களாகவே கெஞ்சிக் கொண்டிருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை கிரீஸின் பொருளாதார 'வளர்ச்சி'க்கு அடிப்படையாக இருந்ததே இந்தக் கடன்தான். உள்நாட்டு முதலாளிகள் நடத்திய வரி ஏய்ப்பும், அரசியல்வாதிகள் நடத்திய வீட்டுமனை ஊழலும் அரசின் கஜானாவைக் காலி செய்து வந்ததால், கிரீஸ் தனது 'வளர்ச்சி'யைத் தக்க வைத்துக் கொள்ள சர்வதேச நிதிச் சந்தையில் இருந்து பெறும் கடனைத்தான் நம்பியிருந்தது.

சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து, கிரிஸீன் பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்திய 24 மணி நேர பொது வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக, ஏதென்ஸ் நகரில் நடந்த பிரம்மாண்டமான ஆர்ப்பாட்ட பேரணி.




கிரீஸ் வெளியிட்டு வந்த கடன் பத்திரங்களைச் சர்வதேச நிதிச் சந்தையில் காசாக்கிக் கொடுக்கும் தரகனாக அமெரிக்காவைச் சேர்ந்த கோல்டுமேன் சாக்ஸ் என்ற வங்கி செயல்பட்டு வந்தது. கடன் பத்திரங்களைத் தடையின்றிக் காசாக்க வேண்டும் என்பதற்காக கிரீஸ் அரசும், கோல்டுமேன் சாக்ஸ் வங்கியும் இணைந்து ஒரு மோசடியில் ஈடுபட்டன. கிரீஸ் அரசின் பட்ஜெட் பற்றாக் குறையைக் குறைத்துக் காட்டி, அந்நாட்டின் பொருளாதாரம்



படிப்பகம்

www.padippakam.com

வலுவாக இருப்பதாக வெளியுலகுக்குக் காட்டப்பட்டது. மேலும், கோல்டுமேன் சாக்ஸ் வங்கி கிரீஸ் அர வாங்கும் கடனுக்குக் காப்பீடு செய்வதை வைத்து ஒரு பந்தயச் சூதாட்டத்தையும் (Derivatives) நடத்தி வந்தது. இதனால் சர்வதேச நிதி முதலீட்டு நிறுவனங்கள் கிரீஸுக்குக் கடனை வாரி வழங்கி வந்தன. அமெரிக்காவில் வெடித்த பொருளாதார நெருக்கடி, அதனையடுத்து சர்வதேசச் சந்தையில் கடன் கிடைப்பது வற்றிப் போனது, கடன் பெறுவதற்கு கிரீஸ் நடத்திவந்த தில்லுமுல்லுகள் அம்பலமானது- இவை அனைத்தும் சேர்ந்து தற்பொழுது கிரீஸைக் குப்புறத் தள்ளிவிட்டுவிட்டன.

ஆனால், முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களோ இந்த உண்மையை மூடி மறைக்கிறார்கள். கிரீஸ் அர , தனது மக்களின் 'நலனுக்காக' மானியங்களை வாரிவாரி வழங்கியதால்தான், கிரீஸ் போண்டியாகும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக அவர்கள் கூசாமல் புளுகி வருகிறார்கள். உணவிற்கும், உரத்திற்கும், பெட்ரோலுக்கும், டீசலுக்கும் மானியங்கள் வழங்குவதால்தான் இந்திய அரசின் பட்ஜெட் பற்றாக்குறை அதிகரித்து வருவதாகப் பொருளாதார நிபுணர்கள் கூறி வருவதில் எவ்வளவு உண்மையுண்டோ, அந்த அளவிற்குத்தான் கிரீஸ் பற்றி நிபுணர்கள் கூறுவதிலும் உண்மையுண்டு.

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த பிற நாடுகள் கிரீஸுக்கு உதவ வேண்டுமென்றால், கிரீஸ் அர பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஜெர்மனியும், பிரான் ம், சர்வதேச நாணய நிதியமும் நிர்பந்தித்து வருகின்றன. இதனடிப்படையில் ஓராண்டுக்கு முன்பே ஓய்வூதியம் குறைப்பு, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களுக்கான மானிய வெட்டு, பணி நிரந்தரச் சட்டத் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு தாக்குதல்களை அந்நாட்டின் உழைக்கும் மக்கள் மீது தொடுத்தது, கிரீஸ் அர . தற்பொழுது ஐரோப்பிய யூனியனும், ஐ.எம்.எஃப்-ம் சேர்ந்து கிரீஸுக்கு 2,65,500 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப்புக் கொண்டுள்ளதையடுத்து, அந்நாட்டில் 38,350 கோடி ரூபாய் பெறுமான மானியங்கள் வெட்டப்பட்டுள்ளன; எரிபொருள் உள்ளிட்டுப் பல்வேறு அத்தியாவசியப் பொருட்கள் மீது விதிக்கப்படும் மறைமுக வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன; ஓய்வூதியத்தைத் தனியார்மயமாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதிச் சூதாட்டத்தை நடத்துவதில் கைதேர்ந்த பேர்வழிகளான வேலியிடப்பட்ட நிதியங்கள் (Hedge funds) கிரீஸின் நெருக்கடியை இரண்டுவிதமாகப் பயன்படுத்தி வருகின்றன. கிரீஸ் அரசின் கடன் பத்திரங்களைக் குப்பைகள் எனத் தன்னிச்சையாக அறிவித்ததன் மூலம், கிரீஸ் சர்வதேச நிதிச் சந்தையில் இருந்து அதிக வட்டிக் கொடுத்துதான் கடன் வாங்க முடியும் என்ற சூழலை உருவாக்கிவிட்டன. இரண்டாவதாக, அமெரிக்க டாலருக்கு எதிரான யூரோவின் செல்வாக்கைத் தட்டிவைப்பதற்காக, தேவைக்கு அதிகமாக யூரோவைச் சந்தையில் கொட்டுவது; கிரீஸை ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறச் சொல்லி ஆசை காட்டுவது ஆகிய நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

அமெரிக்காவைச் சேர்ந்த வேலியிடப்பட்ட நிதியங்கள் கிரீஸைக் குறிவைத்து இறக்கிவிடும் புதுப்புது நிதிச் சூதாட்டக் கருவிகள் பற்றி விசாரணை நடத்தப் போவதாக அமெரிக்க நீதிமன்றமே அறிவிக்கும் அளவிற்கு அவற்றின் நடவடிக்கைகள் இரக்கமற்று உள்ளன. அமெரிக்காவில் சப்-பிரைம் கடன் நெருக்கடி வெடித்த பொழுது, நிதிச் சூதாட்டத்தைச் சட்டம் போட்டுக் கட்டுப்படுத்தப் போவதாக ஏகாதிபத்தியவாதிகள் அறிவித்தனர். அவையெல்லாம் ஏமாற்று வார்த்தைகள் என்பது கிரீஸில் ஒவ்வொரு நாளும் அம்பலமாகி வருகிறது.

யூரோவின் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றால், கிரீஸைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவாக மீட்டுவிட வேண்டும் என ஜெர்மனியும், பிரான் ம் துடியாய்த் துடிக்கின்றன. இதற்காக அந்நாடுகள் சிக்கன நடவடிக்கைகளை விரைவாகவும் தீவிரமாகவும் எடுக்கும்படி கிரீஸுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றன. மேலும், கிரீஸுக்கு அடுத்து ஸ்பெயினிலும், போர்த்துக்கல்லிலும், இத்தாலியிலும், அயர்லாந்திலும் எப்போது வேண்டுமானாலும் நெருக்கடி வெடிக்கலாம் என இவர்கள் எதிர்பார்க்கின்றனர். சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடும் கிரீஸ் நாட்டு உழைக்கும் மக்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டால், அது பிற நாட்டு உழைக்கும் மக்களுக்கு மிகப்பெரும் உத்வேகத்தை அளித்துவிடும் என இவர்கள் அஞ்சி நடுங்குகின்றனர். எனவே, பிரான் மற்றும் ஜெர்மனி ஏகாதிபத்தியங்கள் கிரீஸைத் தங்களின் மேலாதிக்கத் திட்டங்களுக்கான பரிசோதனைச் சாலை மிருகம் போன்றே பயன்படுத்தி வருகின்றன.

வேலியிடப்பட்ட நிதியங்கள் நடத்தும் சூதாட்டம் தேசிய அர களுக்கு அச் றுத்தலாக அமைகிறதென ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவிக்கும் ஜெர்மன் அதிபர் ஏஞ்ஜலா மெர்கெல் (வலது) மற்றும் கிரீஸின் பிரதமர் ஜார்ஜ் பாபன்டிரியோ.





படிப்பகம்

www.padippakam.com

கிரீஸும், துபாயும் விதிவிலக்கானவை அல்ல. ஏன், இந்தியாவையே எடுத்துக் கொள்ளுங்கள். இந்திய அர 2010-ஆம் ஆண்டுக்குள் 33,83,000 கோடி ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ்-ஐச் சேர்ந்த எஸ்.குருமூர்த்தி குறிப்பிடுகிறார். பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைவாகக் காட்ட வேண்டும் என்பதற்காகவே, இந்தக் கடன் தொகை பட்ஜெட்டில் காட்டப்படவில்லை. அதே சமயம், பட்ஜெட் பற்றாக்குறையைச் சமாளிப்பது என்ற பெயரில் சமூக நலத் திட்டங்களுக்கான நிதிதான் வெட்டப்படுகிறதேயொழிய, தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அளிக்கப்படும் வரிச் சலுகைகள் வெட்டப்படுவதில்லை. இவர்களுக்கு ஆண்டுதோறும் 5 இலட்சம் கோடி ரூபாய் வரை வரிச் சலுகைகளை வாரியிறைப்பதனால்தான், இந்திய அரசின் மீதான கடன் மை விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துகொண்டே போகிறது.

**தரகுப் பெரு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஆண்டுதோறும் 5 இலட்சம் கோடி ரூபாய் வரை வரிச் சலுகைகளை வாரியிறைப்பதனால்தான், இந்திய அரசின் மீதான கடன் மை விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துகொண்டே போகிறது.**

இன்றோ அல்லது நாளையோ இந்திய அர தனது கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் போண்டியாகி நிற்குமானால், அந்த நிலையை ஏகாதிபத்திய கும்பல் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதற்கு கிரீஸ் உயிரோட்டமான உதாரணமாக உள்ளது; அதனை எதிர்த்து எப்படிப் போராடுவது என்பதற்கும் கிரீஸ்தான் வழிகாட்டியாக விளங்குகிறது.

● திப்பு

# "டி.ஆர். பாலுவின் சாராய ஆலைக்கு எதிரான வடசேரி மக்களின் போராட்டம் ஓங்கட்டும்!"

## - அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கடந்த 9.4.10 அன்று முன்னாள் தி.மு.க. மத்திய அமைச்சரான டி.ஆர்.பாலுவின் குண்டர் படையும் போலீ கும்பலும் சேர்ந்து கொண்டு தஞ்சை மாவட்டம் - வடசேரி வட்டார மக்கள் மீது கொலைவெறித் தாக்குதலை அரங்கேற்றின. காரணம், 50-க்கும் மேற்பட்ட கிராம மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்க வரும் டி.ஆர்.பாலுவின் சாராய ஆலைக்கு எதிராக அவர்கள் தொடர்ந்து போராடியதுதான். பாலுவின் சாராய ஆலை ஒரு நாளைக்கு 15 லட்சம் லிட்டர் நிலத்தடி நீரை உறிஞ்சினால், நிலத்தடி நீரையே நம்பியுள்ள இப்பகுதியில் விவசாயமே நாசமாகிப் போகும் என்பதாலேயே இப்பகுதிவாழ் மக்கள் இந்த ஆலையை எதிர்த்துப் போராடி வருகின்றனர். இச்சாராய ஆலைக்கு ஊராட்சி மன்றம் அனுமதியளித்து, பின்னர் மக்களின் எதிர்ப்பால் அதை இரத்து செய்தது. இருப்பினும், ஆலைக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக காட்டுவதற்காக மாவட்ட ஆட்சியர், போலீ அதிகாரிகள் மற்றும் பாலுவின் அடியாட்கள் ஏற்பாடு செய்திருந்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க வந்த மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்திய போலீ, முப்பது பேர் மீது பொய் வழக்கு போட்டுச் சிறையில் அடைத்துள்ளது.

வடசேரி மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும், காட்டுமிராண்டித் தாக்குதலை நடத்திய எஸ்.பி.செந்தில் வேலன் உள்ளிட்ட போலீ கும்பலையும் பாலுவின் குண்டர் படையையும் கைது செய்து தண்டிக்கக் கோரியும் தஞ்சை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பேருந்துகளிலும் கடைவீதிகளிலும் துண்டுப் பிர ரங்கள், வரொட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்ததோடு, டி.ஆர்.பாலுவின் உண்மை முகத்தைத் திரைகிழித்து ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; ஆகிய அமைப்புகள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன.



அதன் தொடர்ச்சியாக இவ்வமைப்புகளின் சார்பில், டி.ஆர்.பாலுவின் அடியாட்களும் போலீம் அப்பாவி மக்களைத் தாக்கியதைக் கண்டித்தும், சிறையிடப்பட்டுள்ள மக்களை நிபந்தனையின்றி விடுதலை செய்து அவர்கள் மீதான பொய்வழக்குகளை இரத்து செய்யக் கோரியும், வடசேரி மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும் பட்டுக்கோட்டை தலைமை அஞ்சல் நிலையம் அருகில் 15.4.10 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. போலீ அடக்குமுறைக்கும் அச்சுறுத்தலுக்கும் நடுவே நடந்த இந்த ஆர்ப்பாட்டம், விவசாயிகளிடம் புதிய நம்பிக்கையை விதைத்து, தொடர்ந்து போராட அறைகூவியழைப்பதாக அமைந்தது.

— பு.ஜ.செய்தியாளர், தஞ்சை.



படிப்பகம்

# முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு விழுந்த முதல் அடி! ஒசூர் கமாஸ் வெக்ட்ரா தொழிலாளர் போராட்டம் வெற்றி!

ஒசூர் சிப்காட்டில் இயங்கிவரும் கமாஸ் வெக்ட்ரா எனும் ரசிய பன்னாட்டு நிறுவனம், தனது ஆலையில் கடந்த 12 ஆண்டுகளாக வேலை செய்து வந்த 47 நிரந்தரத் தொழிலாளர்களைப் போலி நிறுவனம் ஒன்றுக்கு மாற்றம் செய்துள்ளதாகக் கூறி அனைவரையும் வீதியில் வீசியெறிந்தது. வேலையிழந்து வாழ்விழந்த தொழிலாளர்கள் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் தலைமையில் அணிதிரண்டு போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். உழைக்கும் வர்க்கத்தின் பேராதரவுடன் கடந்த ஜனவரி 27-ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 6-ஆம் தேதி வரை 69 நாட்கள் நடந்த இப்போராட்டம், ஓசூர் தொழிலாளர் இயக்க வரலாற்றில் முதன்முறையாக மகத்தான வெற்றியைச் சாதித்துள்ளது. தொழிலாளர்கள் இன்று வெற்றிப் பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். முதலாளித்துவப் பயங்கரவாதத் திமிரையும் கொட்டத்தையும் தமது உறுதியான-ஒற்றுமையான போராட்டத்தால் முறியடித்த பெருமையில் அவர்களது நெஞ்சங்கள் விம்மித் தணிகின்றன.




கடந்த 6.4.2010 அன்று ஆலை நிர்வாகத்துக்கும் தொழிற்சங்கத்துக்குமிடையே மாவட்ட ஆட்சியர், தொழிலாளர் நல அலுவலர், தொழிலக ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. போராடிய தொழிலாளர் அனைவருக்கும் அதே கமாஸ் நிறுவனத்தில் வேலை, சர்வீஸ் மற்றும் சேமநலநிதி தொடர்ச்சி, சங்க அங்கீகாரம் முதலான அனைத்தும் ஏற்கப்பட்டன. மறுநாள் 7.4.2010 அன்று காலை 8 மணியளவில் வேலைக்குச் சென்ற தொழிலாளர்கள் பட்டா வெடித்து மகிழ்ச்சியைக் கொண்டாடியதோடு, வழியெங்கும் வெற்றியைப் பறைசாற்றி முழக்கத் தட்டிகளுடன் செங்கொடிகளை ஏந்தி ஊர்வலமாக வந்தனர். இப்போராட்டத்துக்கு உறுதுணையாக நின்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

இப்போராட்ட வெற்றி எளிதில் நடந்துவிடவில்லை. துண்டுப் பிர ரங்கள், வரொட்டிகள், ஆலை வாயிற் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட வேலையிழந்த தொழிலாளர்கள், உழைக்கும் வர்க்கக் குடியிருப்புகளில் வீடு வீடாகவும் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். பேச் வார்த்தைக்கு வரமறுத்து அலட்சியப்படுத்திய ஆலை அதிகாரிகளின் வீடுகளை தொழிலாளர் குடும்பத்தின் பெண்கள் துடப்பக்கட்டையுடன் அன்றாடம் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்து தொடர்ந்து அம்பலப்படுத்தினர். துணை முதல்வர் ஸ்டாலினையும் மாவட்ட ஆட்சியரையும் முற்றுகையிட்டுப் போராடினர். இன்றைய உலகமயமாக்கச் சூழலில் அனைத்து ஆலைத் தொழிலாளர்களின் ஒற்றுமையும் அனைத்து உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையும் அவசியம் என்பதை உணர்ந்து, ஆலை நிர்வாகத்தையும் அரசையும் பணியவைக்கும் போர்க்குணமிக்கப் போராட்டங்களை பு.ஜ.தொ.மு. வின் வழிகாட்டுதலில் அவர்கள் முன்னெடுத்துச் சென்றனர். உழைக்கும் மக்களின் பேராதரவுடன் போராட்டம் பற்றிப் படர்ந்தது. அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஆதரவுக் கரம் நீட்டின. பொதுக் கருத்தும் பொதுமக்களின் நிர்ப்பந்தமும் அதிகரித்ததாலேயே கோடிக்கால் பூதமான தொழிலாளி வர்க்கத்திடம் அர ம் ஆலை நிர்வாகமும் பணிந்தன.

இப்போராட்ட வெற்றியைப் பறைசாற்றியும், தொழிலாளி வர்க்க ஒற்றுமையைக் கட்டியமைத்து முதலாளித்துவப் பயங்கரவாதத்தை முறியடிக்க அறைகூவியும் கடந்த ஏப்ரல் 11-ஆம் நாளன்று பு.ஜ.தொ.மு. சார்பில் பட்டா கள் வெடிக்க, பறைகள் முழங்க, செங்கொடிகள் விண்ணில் பெருமிதத்துடன் ஒளிர பேரணி புறப்பட்டது. தொழிலாளர்களும் உழைக்கும் வர்க்கத்தினரும் இப்பேரணிக்குத் திரண்டு வந்து தொழிலாளர் வர்க்க ஒற்றுமையைப் பறைசாற்றினர். அதைத் தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில், ஓசூரிலுள்ள பல்வேறு ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் தொழிற்சங்க முன்னோடிகளும் தமது போராட்ட அனுபவங்களை விளக்கி, கமாஸ் தொழிலாளர்கள் போராட்டத்தை முன்னுதாரணமாகக் கொண்டு முதலாளித்துவ அடக்குமுறைகளை முறியடிப்போம் என்று சூளுரைத்தனர். ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சி போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது.



புரட்சிகரத் தலைமையின் கீழ் போராடும் தொழிலாளி வர்க்கம் தோற்றதாக வரலாறில்லை.

— பு.ஜ.செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com

# பாசிச மோடிக்குப் புரியுமா, ஒரு தாயின் பரிதவிப்பு!

**"பொடா" கைதிகளாகச் சிறையிலுள்ள தனது மகன்களை மீட்கத் துடிக்கும் ஏழை முசுலீம் தாயின் போராட்டம்.**

குஜராத் மாநிலத்தின் கோத்ராவைச் சேர்ந்த பீபி கடூன் என்ற தாயின் மூன்று மகன்கள், கடந்த எட்டு ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கோத்ராவில், ரயில் பெட்டி ஒன்றுக்குத் தீ வைத்து, 58 பேரைக் கொடூரமாகக் கொலை செய்ய உதவினர் என்பதே இவர்கள் மீதான குற்றச்சாட்டு. இதுவரை இக்குற்றம் நிரூபிக்கப்படவில்லை. இச்சம்பவத்தின் பின்னணியில் தீவிரவாதச் சதி இருப்பதாகக் குஜராத் அரசு தொடர்ந்து குற்றம் சாட்டி வந்தது. அச்சதியை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லை என உயர்நீதி மன்றமும், உச்ச நீதி மன்றமும் தீர்ப்பளித்துவிட்ட போதிலும், இம்மூவருக்கும் இன்றுவரை பிணைகூட கிடைக்கவில்லை.

கோத்ரா ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள, பெரும்பாலும் உழைக்கும் மக்கள் நிறைந்த சேரியான ரெஹ்மத் நகரில்தான் பீபி வசித்து வந்தார். கோத்ரா சம்பவம் நடந்த அன்று மாலை, இச்சேரிக்குள் குவிந்த சீருடையணியாத போலீசார், பீபி கடூனின் மூன்று மகன்கள் உட்பட 14 இளைஞர்களைப் பிடித்துச் சென்றனர். இதனைக் கண்டு கொதித்தெழுந்த அப்பகுதிப் பெண்களிடம், தங்களது உயரதிகாரி விசாரித்தவுடன் அவர்களை அனுப்பிவிடுவதாகப் போலீசார் கூறினர். ஆனால் எட்டு ஆண்டுகளாகியும் அவர்கள் யாரும் திரும்பிவராத நிலையில், ''இன்னமுமா அந்த உயரதிகாரி வரவில்லை?'' என பீபி கடூன் வருத்தத்துடன் கேட்கிறார்.

கைதான அனைவரையும் முதலில் ரயில்வே காவல் நிலையத்தில் வைத்திருந்தனர். பின்னர், அவர்கள் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. அவர்கள் இருக்குமிடத்தைப் பற்றிச் சொல்லக் கூட போலீசார் மறுத்துவிட்டனர். மூன்று மாதங்களுக்குப் பிறகு, தாங்கள் அகமதாபாத் சபர்மதி சிறைச்சாலையில் இருப்பதாகக் கூறி பீபியின் மகன்கள், தங்களின் தந்தைக்குக் கடிதம் எழுதினர். கோத்ராவில் ரயில் பெட்டியைக் கொளுத்த சதி செய்ததாக, இவர்களுடன் சேர்த்து 131 பேர் மீது ''பொடா'' கருப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதியப்பட்டது.

சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தனது மகன்களைப் பார்த்த பீபிக்கு இதயமே வெடித்துவிடும் போலிருந்தது. அவர்கள் உடல் மெலிந்து, பேயறைந்தது போலக் காணப்பட்டனர். தாங்கள் பட்ட அடிகள், சித்திரவதைகளைப் பற்றி அருகில் இருந்த சிறை ஊழியர்களுக்குக் கேட்காவண்ணம், கிசுகிசுக் குரலில் அவர்கள் விம்மினார்கள். தாங்கள் சிறுநீர் கழித்த வாளியிலேயே, தண்ணீர் குடிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டதாகக் கூறினர். தனது மகன்களிடம், ''நம்பிக்கை தளர வேண்டாம்'' என்றும், ''சிறையிலிருந்து வெளிக்கொணர தன்னால் இயன்றதனைத்தையும் செய்வதாகவும்'' அவர்களின் தந்தை உறுதியளித்தார்.

பீபியின் மூத்த மகனுக்கு, பள்ளி செல்லும் வயதில் இரு மகன்கள் இருந்தனர். இரண்டாவது மகனுக்கு, கைதாவதற்குச் சில மாதங்களுக்கு முன்புதான் திருமணமாகியிருந்தது. அவர் சிறையிலிருக்கும் போதுதான் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பீபியின் கடைசி மகனோ பதின் வயதில் இருந்தான். வேலைக்குச் சென்று சம்பாதிக்க மகன்கள் யாரும் இல்லாத நிலையில், வீட்டில் உணவுக்கே திண்டாட்டமானது. பீபியின் வயதான கணவர், கிடைத்த வேலையைச் செய்துகொண்டிருக்க, பீபியும் அவரது இரு மருமகள்களும் வீட்டு வேலை கிடைக்குமா எனத் தேடிக் கொண்டிருந்தனர். ஆனால், தீவிரவாதியின் குடும்பம் என்றும், பொடா குடும்பம் என்றும் முத்திரை குத்தப்பட்டதால் யாரும் வேலை கொடுக்கவில்லை.

தனது குடும்பத்தை உயிரோடு வைத்திருக்கப் பிச்சையெடுக்கும் இழிநிலைக்குத் தள்ளப்பட்ட கோத்ராவைச் சேர்ந்த ஏழைத்தாய் பீபி கடூன்.



2004-ஆம் ஆண்டு, ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசு, பொடா கருப்புச் சட்டத்தை திரும்பப் பெற்றது. ஆனால், சட்டத்தை முன்தேதியிட்டுத் திரும்பப் பெறாததால், பொடாவில் கைதானவர்கள் விடுவிக்கப்படவில்லை. அச்சட்டத்தின் அடிப்படையிலேயே வழக்கு நடந்தது. தில்லியின் புகழ்பெற்ற கிரிமினல் வழக்குரைஞர்களான நித்தியா இராமகிருஷ்ணன் மற்றும் ஹசன் போன்றவர்கள், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடினர். குஜராத் அரசின் வாதப்படி, தாக்குதலில் ஈடுபட்ட கும்பல் முன்பே திட்டமிட்டு இதனைச் செய்ததாகவும், வெளியிலிருந்து ரயில் பெட்டிக்குள் பெட்ரோலை



படிப்பகம்

www.padippakam.com

ஊற்றியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், வெளியிலிருந்து ரயில் பெட்டிக்குள் பெட்ரோலை ஊற்றுவது என்பது, மனித சக்தியால் இயலாத காரியம் என தடயவியல் அறிக்கை கூறுகிறது. அதேபோல, ரயில் பெட்டிக்குள் பெட்ரோலின் மூலக்கூறான ''ஹைட்ரோ கார்பனின்'' தடயங்கள் எதுவும் இல்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. மாநிலப் போலீசாரால் புனையப்பட்ட இவ்வழக்கில், இதுபோன்று மேலும் பல ஓட்டைகள் இருப்பதாக இவ்வழக்குரைஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வழக்கு நடைபெற்ற எட்டு ஆண்டுகளில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குச் சாதகமாகப் பல தீர்ப்புகள் வந்துள்ளன. ஒவ்வொரு முறையும் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என பீபியும் மற்றவர்களும் நம்பினர். ஆனால், இவர்களது நம்பிக்கை ஒவ்வொரு முறையும் தகர்ந்தது. 2005-ஆம் ஆண்டில் பொடா மறு ஆய்வுக் குழு, இந்த வழக்கில் தீவிரவாத சதி இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை எனவும், இந்தியாவின் பாதுகாப்பைக் குலைக்கும் அம்சங்கள் எதுவும் இல்லை எனவும் உறுதிப்படுத்தியது. இதனால் பொடாவின் கீழ், இவர்கள் மேல் எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. இதனை ஏற்றுக்கொள்ள விரும்பாத குஜராத் அரசு, உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. ஆனால் உயர்நீதி மன்றமும், பின்னர் உச்சநீதி மன்றமும் மறு ஆய்வுக் குழுவின் முடிவையே உறுதிசெய்தன. இருப்பினும், குஜராத் அரசு குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்கவில்லை. அவர்கள் மீது சாதாரண குற்றவியல் சட்டங்களின்கீழ் வழக்குத் தொடுத்துள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலர், குற்றம் நிரூபிக்கப்பட்டால் கிடைக்கக்கூடிய தண்டனைக் காலத்தை விட அதிகமான வருடங்களை விசாரணைக் கைதிகளாகவே சிறையில் கழித்துவிட்டனர். இருந்தபோதிலும், இவர்களுக்கு சாதாரண குற்றவியல் சட்டங்களின் கீழ் கூட பிணை வழங்கப்படவில்லை.

இதனிடையில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பீபியின் கணவர் தொண்டைப் புற்று நோயால் பாதிக்கப்பட்டார். சாகக் கிடக்கும் தங்களது தந்தையைக் கடைசியாகப் பார்க்க, மகன்களுக்கு ஆளுக்கொரு நாள் பரோல் கொடுக்கப்பட்டது. அவரது மரணத்திற்குப் பிறகு அப்பெரிய குடும்பத்தைச் சுமக்கும் பாரம், பீபியின் தோளில் இறங்கியது. மூப்பின் காரணமாகவும், ஒரு விபத்தின் காரணமாகவும் அவரால் வேலை செய்ய இயலவில்லை. அவர் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். நடக்க முடியாத அவர், கோத்ரா நகரத்து வீதிகளில் நொண்டி நொண்டிச் சென்று பிச்சையெடுக்கிறார். பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த அவரது மூத்த பேரனின் படிப்புக்குத் தேவைப்பட்ட பணத்தை அவர் பிச்சையெடுத்துச் சேர்த்துத் தந்தார். ஆனால், அவன் பொதுத்தேர்வில் தோல்வியடையவே, அவனைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிட்டார். அவருடைய இளைய பேரனை இன்னமும் முன்னதாக, எட்டாம் வகுப்போடு நிறுத்திவிட்டார். அவர்கள் இருவரும் தற்போது, தினமும் ஐம்பது ரூபாய் கூலிக்குப் பட்டறையில் வேலை செய்கின்றனர்.



இந்துவெறி பயங்கரவாத வெறியாட்டங்களுக்குச் சாக்காக அமைந்த கோத்ரா தீ விபத்து.

சிறையிலிருப்பவர்களைப் பார்க்கச் செல்வதற்கான பேருந்துக் கட்டணச் செலவுகள் அவர்களது ஒரு மாதச் சம்பளத்தை விழுங்கிவிடுவதால், தற்போது அவர்கள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மட்டுமே செல்கின்றனர். சிறையில் உள்ள பீபியின் மகன்கள், உடல் மெலிந்து, காசநோய் போன்ற கடும் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பீபியின் கடைசி மகனான சபீக், சிறையில் புத்தி சுவாதீனம் இழந்துவிட்டான். காகிதத்தையும், குப்பையையும் பொறுக்கித் தின்கிறான். சில சமயங்களில் பிற கைதிகளையும், சிறை ஊழியர்களையும் தாக்குகிறான். தனது குடும்பத்தையே அவனால் அடையாளம் காணமுடியவில்லை. ''அவனை அவர்கள் பிடித்துச் சென்ற வயதில், பால்பற்கள் விழுந்து அவனுக்கு புதிய பற்கள் கூட வளரவில்லை. எனது செல்ல மகனை அவர்கள் எப்படி எல்லாம் சீரழித்து விட்டார்கள்?'' என பீபி கதறுகிறார். அவனுக்கு சிகிச்சையளிக்க பரோல் கொடுக்குமாறு, அவர்களது வழக்கறிஞர்கள் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

தனது குடும்பத்தை உயிரோடு வைத்திருக்கப் பிச்சையெடுக்கும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டதை எண்ணி, பீபி கூனிக் குறுகுகிறார். மேலும், தனது மகன்கள் மீது இப்படிப்பட்ட படுபாதகக் குற்றம் சுமத்தப்பட்டதை எண்ணி வெட்கப்படுகிறார். ''மகனே, நான் படிப்பறிவில்லாதவள். இந்தச் சட்டங்கள் எனக்குப் புரிவதில்லை. ஆனால் அப்பாவியான எனது மகன்கள், ஏன் இத்தனை ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என எனக்கு விளக்குங்கள்'' எனக் கேட்கிறார்.

தன் பேச்சைக் காதுகொடுத்துக் கேட்பவர்களிடம் அவர் கெஞ்சுவது ஒன்றுதான்: ''எனது மகன்களைச் சிறையிலிருந்து விடுவிக்க உங்களால் உதவ முடியுமா? அவர்கள் விடுதலையாவதைக் காண நான் உயிருடன் இருப்பேனா?''

● ந்தர்

(தி இந்து நாளேட்டில் (பிப்ரவரி 27, 2010)
ஹர்ஷ் மந்தர் எழுதிய கட்டுரையின்
சாரமான தமிழாக்கம்)



படிப்பகம்

www.padippakam.com

# காவிக் கறை படிந்த தீர்ப்புகள்

## ஒரிசா கிறித்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் வழக்குகளில், முக்கிய குற்றவாளிகள் தண்டனையின்றித் தப்பிவிட்டனர்.

ஒரிசா கந்தமால் பகுதியில் 2007 டிசம்பரில் தொடங்கி 2008 இறுதி வரை கிருத்தவர்கள் மீது இந்து வெறியர்கள் நடத்திய பாசிச பயங்கரவாதத் தாக்குதலில் அப்பாவிக் கிருத்துவர்கள் பலரும் கொல்லப்பட்டனர்; பெண்கள் வன்புணர்ச்சிக்கு ஆளாகினர்; வீடுகள், கிராமங்கள் சூறையாடப்பட்டன; ஆயிரக்கணக்கானவர்கள் அகதி முகாம்களில் தஞ்சடைந்தனர்.

இந்த வழக்குகளை விசாரிக்க இரு விரைவு நீதிமன்றங்கள் 2008-இல் அமைக்கப்பட்டன. விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 123 வழக்குகளில் 63-இல் தீர்ப்பு அளிக்கப்பட்டு 89 பேருக்கு தண்டனையும், 303 பேருக்கு விடுதலையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்புகளின் இலட்சணத்தை சிறிது சுரண்டிப் பார்த்தால் நீதிமன்றங்களின் இந்துத்துவ பா(சி)சம் அப்பட்டமாகத் தெரிகிறது. விடுவிக்கப்பட்டவர்கள் கொலை, வன்புணர்வு, தீயிட்டுக் கொளுத்துதல் போன்ற பயங்கர குற்றங்களில் ஈடுபட்டவர்கள். பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினரான மனோஜ் பிரதான் அவர்களில் முக்கியமானவன். இவன் மீதுள்ள 8 வழக்குகளிலும் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி விடுவிக்கப்பட்டுள்ளான்.

அந்த வழக்குகளில் ஒன்று, பிரா என்ற பெண்ணின் கணவனைக் கொன்றது ஆகும். கட்டிய கணவனை பிரதானும், அவனது ஆட்களும் பிடித்து இழுத்துச் சென்றதைத் தடுக்க வழியின்றிக் கதறிய இந்த அபலைப் பெண், நீதி கிடைத்து விடுமென்றே கடைசி வரை நம்பியிருந்தார். ஆனால், சம்பவம் நடந்த அன்றுதான் பிரதானை முதல்முறையாக அந்தப் பெண் சந்திக்கிறாள் என்றும், எனவே அத்தனை பெரிய கும்பலில் அவள் சரியாக அவனை அடையாளம் கண்டுகொண்டாள் என்பது நம்பக்கூடியதாக இல்லை என்றும் கூறி விரைவு நீதிமன்ற நீதிபதி தாஸ் அவனை விடுதலை செய்துவிட்டார். இதன் நேரடிப் பொருள் எம்.எல்.ஏ.வின் முகம் கூட அந்தப் பெண்ணுக்குத் தெரியாது என்பதுதான். ''இன்னார்தான் ராகுல் காந்தி என அடையாளம் காட்டுவதற்கு நான் ராகுல் காந்தியை முன்பே சந்தித்திருக்க வேண்டுமா என்ன?'' என்று மனமுடைந்து போய் பிரா கேட்கிறார்.

வீடுகளைக் கொளுத்திய இன்னொரு வழக்கில், பிரதான்தான் வீட்டை எரித்தான் என்ற வீட்டு உரிமையாளர்களின் சாட்சிகளை நீதிபதி தாஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. சம்பவம் இரவிலே நடந்துள்ளதால் குற்றவாளிகளின் முகத்தை சாட்சிகளால் சரியாகப் பார்த்திருக்க முடியாது என்கிறார் நீதிபதி. எரியும் நெருப்பு வெளிச்சத்தில் முகங்கள் பளிச்சென்று தெரியுமென்பதைக்கூட நீதிமன்றங்களின் இந்துத்துவக் கொழுப்பு ஏற்க மறுத்துவிட்டது. ஒரு சாட்சியின் வயதை விசாரணை அதிகாரி தவறாகப் பதிவு செய்திருப்பது, சாட்சிகள் எந்தப் புதருக்குப் பின்னே மறைந்திருந்தனர் என்ற விவரமின்மை போன்ற மிகவும் அற்பமான பிழைகளைக் காட்டியும் விடுதலை செய்துள்ளார் நீதிபதி.

போலீத் துறையானது வழக்குகளை பலவீனமாக்கும் சதிகளை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போதிலிருந்தே தொடங்கியுள்ளது. பிராவின் கணவன் இழுத்துச் செல்லப்பட்டதை 'காணாமல் போய்

விடுதலை செய்யப்பட்ட குற்றவாளியான பா.ஜ.க. பயங்கரவாதி மனோஜ் பிரதானின் அட்டூழியத்திற்குச் சாட்சியமாக இருக்கும் தேவாலய இடிப்பு.





படிப்பகம்

www.padippakam.com




இந்துவெறி பாசிசப் பயங்கரம்:
தரைமட்டமாக்கப்பட்ட கிறித்துவ தேவாலயம்.

விட்டார்' என்றே பதிவு செய்துள்ளனர். மேலும், சாட்சிகள் மிரட்டப்படுகிறார்கள் என்று முறையிடப்பட்டதை நீதிமன்றம் கண்டுகொள்ளவேயில்லை. பொடிமுண்டா கிராமத்தில் வழக்குகளைத் தொடர்ந்து முன்னெடுத்த கிருத்துவர்களைத் தாக்கி, அகதிகளாக அவலத்தில் உழன்ற அவர்களின் பிளாஸ்டிக் குடில்களை ஆர்.எஸ்.எஸ். கிரிமினல்கள் கிழித்தெறிந்துள்ளனர். அந்த ஊர் போலீ ஆய்வாளரோ ஆர்.எஸ்.எஸ்.க்காரர்கள் மீது எந்த வழக்கு போட்டாலும் அவர்கள் வெளியே வந்துவிடுகிறார்கள் என்று கூறி கையை விரிக்கிறார். இந்து வெறியர்கள் எதிர்பார்த்தபடியே பொடிமுண்டா கிராம வழக்குகள் நீதிமன்றத்தால் கைவிடப்பட்டன.

கந்தமால் இந்துவெறி பாசிசப் படுகொலை வழக்குகளின் நிலை இதுவென்றால், 1998-இல் பஜ்ரங்தள் கிரிமினல் தாராசிங்கால் பாதிரியார் ஸ்டெயின்ஸும், அவரது இரு பச்சிளம் குழந்தைகளும் உயிரோடு எரிக்கப்பட்ட வழக்கின் நிலை அதைவிடக் கேவலமானது. தாராசிங்கிற்கு மரணதண்டனையும், 12 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து 2003-இல் தீர்ப்பளித்தது, சி.பி.ஐ. நீதிமன்றம். பாதிரியை எரித்த கையோடு, சையிக் ரஹ்மான் என்ற வியாபாரியை எரித்துக் கொன்றது, பாதிரியார் அருள்தாஸை வெட்டிக் கொன்றது ஆகிய வழக்குகளும் தாராசிங்கின் மீது உள்ளன. ஆனால், சி.பி.ஐ. நீதிமன்றமோ ஸ்டெயின்ஸ் பாதிரியார் எரிக்கப்பட்ட சம்பவம் அரிதிலும் அரிதானதொரு சம்பவம் என்றது.

சங்கப் பரிவாரங்களுடன் தாராசிங்கிற்கு உள்ள தொடர்புகள் குறித்து ஆதாரங்கள் நீதிமன்றத்தின் முன்பு வைக்கப்பட்டன. ஆனால், இந்த படுகொலையில் எந்த அமைப்புக்கும் தொடர்பில்லையென்று கூறியது, சி.பி.ஐ. நீதிமன்றம்.

இந்த விளக்கங்களுக்குப் பொருத்தமானதொரு தீர்ப்பாக தாராசிங்கின் மரணதண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தும், 11 பேரை விடுதலை செய்தும் 2005-இல் தீர்ப்பு வழங்கியது ஒரிசா உயர்நீதிமன்றம். பாதிரியாரைக் கொலை செய்யும் வகையில் தாராசிங் தாக்கியதற்கு ஆதாரமில்லை என்று வேறு உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இப்பொழுது, உச்சநீதி மன்றத்தில் பிணை கேட்டுள்ள தாராசிங்கிற்கு, மேற்சொன்ன உயர்நீதி மன்றத்தின் கூற்று உதவக்கூடும்.

இந்திய நீதிமன்றங்கள் இந்துத்துவத்திற்குப் பக்கமேளம் வாசிப்பவையாகவே உள்ளன என்பதை இந்த வழக்குகள் அப்பட்டமாகக் காட்டுகின்றன. நீதிமன்றங்களின் பாசிசத்தை வீதிகளில் இறங்கி முறியடிக்க வேண்டும்; மக்கள் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு பாசிச பயங்கரவாதிகளைத் தண்டிக்க வேண்டும்; இல்லையேல் அநீதி மன்றங்களின் ஆசியோடு இந்துவெறி பாசிசம் வெளிப்படையாகவே கொட்டமடிக்கும் என்பதையே இவை எச்சரிக்கையாக உணர்த்துகின்றன.

● கந்தசாமி

## அறிவிப்பு

தோழமைமிக்க சந்தாதாரர்களுக்கு,

புதிய ஜனநாயகம் இதழ், ஒவ்வொரு மாதமும் முதல் அல்லது இரண்டாம் தேதியில் சந்தாதாரர்கள் அனைவருக்கும் அஞ்சல்துறை மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. இப்படி அனுப்பப்படும் இதழ்கள் அடுத்த ஐந்து வேலை நாட்களுக்குள் சந்தாதாரர்களுக்குக் கிடைத்துவிடும் என எமது நிர்வாகம் எதிர்பார்க்கிறது. அப்படிக் கிடைக்காதபட்சத்தில், சந்தாதாரர், தனது வீட்டு முகவரி, சந்தா எண், எந்த மாத இதழ் கிடைக்கவில்லை என்ற விவரங்களை எமது நிர்வாகத்திற்குக் கடிதம் வாயிலாக முறையாகத் தெரிவிக்க வேண்டுகிறோம். வாய்ப்பு இருப்பின், சந்தாதாரர் தனக்கு இதழ் கிடைக்கப் பெறாமல் தவறிப் போனதைத் தனது பகுதிக்குரிய அஞ்சலகத்திலும் முறையீடு செய்யலாம்.

எனினும், இதழ் கிடைக்கப் பெறாததைக் கடிதம் வாயிலாக எமது நிர்வாகத்திற்கு தெரிவிக்கும் பட்சத்தில்தான், சந்தாதாரருக்குத் தவறிப் போன இதழ் மட்டுமின்றி, எதிர்வரும் இதழ்களும் முறையாகக் கிடைப்பதை எமது நிர்வாகம் அஞ்சல்துறை வாயிலாக உறுதிப்படுத்த முடியும். சந்தாதாரர் கடிதம் எழுதாமல், கைபேசி வழியாக இதழ் கிடைக்கப் பெறாததைத் தெரிவித்தால், எமது நிர்வாகம் அம்முறையீடு பற்றிப் பதிவு செய்து கொள்ள முடியுமே அன்றி, அஞ்சல்துறை வாயிலாக உரிய நடவடிக்கை எடுக்க இயலாது. எனவே, சந்தாதாரர்கள் இனி வரும் காலங்களில் இதழ் கிடைக்காதபட்சத்தில், அதனைக் கடிதம் வாயிலாக எமது நிர்வாகத்திற்குத் தெரிவிக்கும் நடைமுறையைச் சிரமம் பார்க்காது பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சந்தாதாரர் யாராவது, புதிய ஜனநாயகம் முகவரை அணுகி, இதழ் கிடைக்காதது பற்றி முறையீடு செய்தால், முகவர்கள் அவர்களிடம் இந்நடைமுறையைப் பின்பற்றும்படிக் கூற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி,
புதிய ஜனநாயகம்.



படிப்பகம்

www.padippakam.com

# இருதலைக் கொள்ளி எறும்பாய் ஐதராபாத் நகரம்

## ஆர்.எஸ்.எஸ்.க்கும் எம்.ஐ.எம்.–க்கும் இடையே நடந்த பலப்பரீட்சைதான் ஐதராபாத் கலவரத்தின் பின்னணி.

கடந்த எட்டாண்டுகளாக மதக் கலவரமின்றி அமைதியாக இருந்த ஆந்திர மாநிலத் தலைநகரான ஐதராபாத்தில், கடந்த மார்ச் மாத இறுதியில் மீண்டும் மதவெறித் தாக்குதல்கள் நடந்துள்ளன. கடந்த மார்ச் 27-ஆம் தேதி முதலாக நான்கு நாட்களுக்கு நடந்த இம்மதவெறித் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இந்து, முஸ்லிம் மதவெறியர்கள் தமக்கிடையே கல்லெறிந்து நடத்திய கலவரத்தில் பலர் படுகாயமடைந்தனர். ஐந்து மசூதிகளும் ஒரு இந்துக் கோயிலும் சேதமடைந்தன. ஆண்களையும் வாகனங்களையும் கடைகளையும் அடித்து நொறுக்குவது, பெண்களை அவமானப்படுத்துவது என்பதாக இரு தரப்பும் வெறியோடு தாக்குதலை நடத்தின. 8 போலீ நிலையங்களை உள்ளடக்கிய பகுதிகளில் ஊரடங்கும், கண்டதும் ட உத்தரவும் பிறப்பிக்கப்பட்டன. 1800-க்கும் மேற்பட்ட துணை இராணுவப் படைகள் இப்பகுதியில் குவிக்கப்பட்டு, 272 பேர் கைது செய்யப்பட்டு, இக்கலவரத் தீ மேலும் பரவாமல் தற்காலிகமாகத் தடுக்கப்பட்ட போதிலும், இன்னமும் நீறுபூத்த நெருப்பாகவே நீடிக்கிறது.

ஐதராபாத் நகரில் மஜ்லிஸ் இட்டேஹாதுல் முஸ்லிமீன் (எம்.ஐ.எம்.) எனும் இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சியும் இந்துவெறி பா.ஜ.க.வும் போட்டி போட்டுக் கொண்டு மதவெறியைக் கிளறிவிட்டு ஆதாயம் தேடுகின்றன. பலதலைமுறைகளாக பழைய ஐதராபாத் நகரத்தின் அரசியலைக் கட்டுப்படுத்துவது எம்.ஐ.எம். கட்சிதான். காங்கிர ம் இக்கட்சியும் நெருக்கமான கூட்டாளிகள். சட்டமன்றத்தில் ஏழு இடங்களை எம்.ஐ.எம். பெற்றுள்ளது. ஐதராபாத் மாநகராட்சியின் மேயர் பதவியை காங்கிர பெற்றுள்ளது. மாநகராட்சியில் பெரும்பான்மை பலத்துடன் இதர பசையான பதவிகளை எம்.ஐ.எம். ருட்டியுள்ளது. பழைய ஐதராபாத் நகரத்தில் இக்கட்சி வைத்ததுதான் சட்டம் என்கிற நிலைதான் நீடிக்கிறது.

நடுத்தர-மேட்டுக்குடி வர்க்கத்தினர் நிறைந்த புது ஐதராபாத் ஆடம்பரமாக வளர்ச்சியடைந்துள்ள நிலையில், அடித்தட்டு முஸ்லிம் உழைக்கும் மக்கள் நிறைந்த பழைய ஐதராபாத்தோ இன்னமும் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றிப் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறது. சேரிகள் நிறைந்த இப்பகுதியில் வாழும் உழைக்கும் மக்கள் அமைப்புசாராத் தொழில்களில் ஈடுபடும் கூலித் தொழிலாளிகள். வேலையின்மையும் வறுமையும் இப்பகுதியை நீண்டகாலமாகப் பீடித்துள்ளது. இங்கு ஆதிக்கம் செலுத்தும் எம்.ஐ.எம். தலைவர்களோ வர்த்தகம் மற்றும் அரசாங்கப் பதவிகளில் கொடிகட்டிப் பறக்கும் - ஊழலில் ஊறித் திளைக்கும் கோடீ வரர்கள். தனித் தெலுங்கானாவை எதிர்ப்பதால் ஐதராபாத் முஸ்லிம்களிடமிருந்து இக்கட்சி அண்மைக் காலங்களில் தனிமைப்பட்டுள்ளது. ஜமாத் இ இஸ்லாமி ஹிந்த் என்ற முஸ்லிம் அடிப்படைவாதக் கட்சி தெலுங்கானாவை ஆதரித்து பிரச்சாரம் நடத்தி வருவதால், அக்கட்சியின் பின்னே முஸ்லிம்கள் அணிதிரண்டு வருகிறார்கள்.

இந்நிலையில், முஸ்லிம்களை தம் பின்னே மதரீதியாக அணிதிரட்டிக் கொள்ளவும், தனது ஓட்டு வங்கியைத் தக்கவைத்துக் கொள்ளவும் பொருத்தமான வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருந்தது, எம்.ஐ.எம். கடந்த



பழைய ஐதராபாத்திலுள்ள சித்தியாம்பர் பஜாரில் இந்து-மு லீம் மதவெறியர்களுக்கு இடையே நடந்த கல்லடிச் சண்டையில், தலையில் கல்லடிபட்ட முதியவரைத் தூக்கிச் செல்லும் அதிரடிப்படை போலீசார்.

பிப்ரவரி இறுதியில் நடந்த மீலாடி நபி விழாவை இதற்குப் பயன்படுத்திக் கொண்டது. வரலாற்றில் இதுவரை மீலாடி நபி விழா இப்படி நடந்ததில்லை எனுமளவுக்கு எங்கு திரும்பினாலும் கொடிகள், பதாகைகள், அலங்காரங்கள் என அமர்க்களமாக ஐதராபாத் நகரம் பச்சை நிறமாகக் காட்சியளித்தது. விழா முடிந்த பின்னர் போலீ ம் அவற்றை அகற்றக் கோரவில்லை. அத்துமீறி வைக்கப்பட்ட இவற்றுக்கு மாநகராட்சியும் அபராதம் விதிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து, இந்துவெறி அமைப்புகளும் இதே பாணியில் மார்ச் 24-இல் ராமநவமி விழாவை இதுவரை கண்டிராத வகையில் பெரும் கொடிகள், பதாகை



படிப்பகம்

www.padippakam.com

கள், பேரணிகள் என போட்டிபோட்டுக் கொண்டு அமர்க்களப்படுத்தின. ஐதராபாத் மாநகராட்சியில் ஒரு இடத்தை மட்டுமே கைப்பற்றியுள்ள பா.ஜ.கட்சி, மதக் கலவரத்தின் மூலம் எம்.ஐ.எம். கட்சியை முடக்கவும், முஸ்லிம்களை அச் றுத்தி தனது ஓட்டு வங்கியை விரிவுபடுத்திக் கொள்ளவும் திட்டமிட்டே இத்தகைய எதிர் நடவடிக்கைகளில் இறங்கியது. பச்சைக் கொடிகள்-பதாகைகளை கிழித்தெறிந்துவிட்டு காவிக் கொடிகளை இந்து வெறியர்கள் ஏற்றத் தொடங்கியதும், மதன்னாபேட்டையில் தகராறு மூண்டு, பின்னர் இரு மதங்களின் பெரியோர்களும் போலீ ம் சமரசம் பேசி பிரச்சினையைத் தீர்த்தனர். பின்னர், அனுமார் ஜெயந்தியை ஒட்டி இந்து வெறியர்கள் மீண்டும் பச்சைக் கொடிகளைக் கிழித்து காவிக் கொடியேற்றியதையொட்டி, மார்ச் 27 அன்று மூசா பௌவ்லி பகுதியில் தகராறு மூண்டு, அதிலிருந்து கலவரத் தாக்குதல் பரவத் தொடங்கியது.

ராமநவமி விழாவுக்கு முன்னதாக வி வ இந்து பரிசத்தின் தலைவர்களுள் ஒருவரான ஆச்சார்ய தர்மேந்திரா, ஐதராபாத் நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் முஸ்லிம்களை இழிவுபடுத்தி ஆத்திரமூட்டும் வகையில் பேசினார். சில மாதங்களுக்கு முன்னதாக ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத், ஸ்வயம்சேவக்குகளை வைத்து மிகப்பெரிய ஊர்வலம் நடத்தினார். சிறுபான்மையினரை அச் றுத்தும் வகையில் இவை திட்டமிட்டு நடத்தப்பட்டன. மார்ச் 30 அன்று அனுமான் ஜெயந்தி விழாவைச் சாக்கிட்டு பஜ்ரங்தளமும் இந்து வாகினியும் 5000 குண்டர்களைத் திரட்டி மோட்டார் சைக்கிள் ஊர்வலம் நடத்தின. பழைய ஐதராபாத் நகரத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், புது நகரில்




ஐதராபாத்திலுள்ள பேகம் பஜாரில் பல கடைகளும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்ட பின், அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ள அதிவிரைவு அதிரடிப் போலீசார்.

இப்படி ஊர்வலம் நடத்த இந்து வெறியர்களுக்குச் சாதகமாக போலீ அனுமதி அளித்தது. முஸ்லிம்கள் மாட்டுக்கறி உண்பதை அவமதிக்கும் வகையில் இந்த ஊர்வலத்தில் ஒரு ப வையும் கன்றையும் வாகனத்தில் ஏற்றிப் ''ப வைப் பாதுகாப்போம்!'' என்ற முழக்கத்துடன் இந்து வெறியர்கள் ஊர்வலம் நடத்தினர்.

ஊர்வலம் முஷீராபாத்தை நெருங்கியதும் ஊர்வலத்தில் வந்த இந்துவெறிக் குண்டர்கள் மையமான ஊர்வலப் பாதையிலிருந்து விலகி, முஸ்லிம்கள் நிறைந்த குறுகலான சந்துகளில் மோட்டார் சைக்கிள் ஊர்வலம் நடத்தி முஸ்லிம்களுக்கு எதிராக முழக்கமிட்டனர். வழியெங்கும் கண்ணில்பட்ட முஸ்லிம்களையும் முஸ்லிம் கடைகளையும் தாக்கினர். அதற்கெதிராக முஸ்லிம்கள் கல்லெறிந்து எதிர்தாக்குதலை நடத்தினர். அதைத் தொடர்ந்து, செகந்திராபாத்தில் வன்முறைத் தாக்குதல்களில் இருதரப்பும் இறங்கின.

கலவரத்தில் ஈடுபட்ட இந்துமதவெறி அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்களை போலீசார் கைது செய்ததைக் கண்டித்து, பா.ஜ.க. ஐதராபாத் நகரில் நடத்திய திடீர் ஆர்ப்பாட்டம்.



ஐதராபாத்தில் முஸ்லிம்களிடம் செல்வாக்கு பெற்றுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத எம்.ஐ.எம்.கட்சி, அதற்கு ஆதரவாக நிற்கும் காங்கிர கட்சி, ஆந்திர காங்கிரசில் நிலவும் கோஷ்டிச் சண்டை - தெலுங்கானா விவகாரம் ஆகியவற்றின் நடுவே மதவெறிக் கலவரத்தைத் தூண்டி குளிர்காயத் துடிக்கும் இந்துவெறி அமைப்புகள், புறக்கணிக்கப்பட்ட பழைய நகரத்தின் முஸ்லிம் உழைக்கும் மக்களின் குமுறல், மதவெறி சக்திகள் மீது நடவடிக்கை எடுக்காமல் கைகட்டி நிற்கும் அதிகார வர்க்கமும் போலீ ம், மதச்சார்பின்மை பே ம் இடதுசாரி கட்சிகளின் கையாலாகாத்தனம் - ஆகிய அனைத்தும் சேர்ந்து கலவரத் தீ பற்றி எரிவதற்கான சாதகமான நிலையைத் தோற்றுவித்திருக்கின்றன. மதவெறி சக்திகளை தனிமைப்படுத்தி முறியடிக்காவிட்டால், தற்போதைக்கு ஓய்ந்துள்ள கலவரத் தீ மீண்டும் காட்டுத் தீயாகப் பரவும் அபாயகரமான நிலைமையே ஐதராபாத் நகரைக் கவ்வியுள்ளது.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# காமுகர்களின் கூடாரமாகக் கத்தோலிக்கத் திருச்சபை!

## கத்தோலிக்க குருமார்கள் பரப்புவது இயேசுவின் போதனைகளையா? இல்லை, எய்ட்ஸ் நோயையா?

தேவனுடைய ராச்சியம் குழந்தைகளுடையது என்றும் குழந்தைகளைப் போல கள்ளம் கபடமற்றவர்களுக்கே சொர்க்கத்தின் கதவுகள் திறக்கும் என்றும் இயேசு சொல்லி இருக்கிறாராம். ஆனால், தேவனின் ராச்சியத்தை அறிவிக்கக் கிளம்பிய பாதிரிகள் சிலர், குழந்தைகளிடம் அத்துமீறிய பாலியல் வக்கிரங்களில் ஈடுபட்டு அம்பலப்பட்டு நிற்கிறார்கள். இவர்களைத் தண்டிக்க வேண்டிய உயர்பீடங்களில் இருக்கும் பிஷப்புகளே, இவர்களைத் தப்புவிக்க உடந்தையாக இருந்துள்ளதும் மேற்கத்திய ஊடகங்களில் அம்பலமாகியுள்ளது.

அயர்லாந்தில் கிருத்துவ சபையால் நடத்தப்படும் உறைவிடப் பள்ளிகளிலும், பிற கல்வி நிறுவனங்களிலும் சிறுவர்-சிறுமியர் மீது பல ஆண்டுகளாகப் பாலியல் வன்முறையைக் கையாண்டு வந்துள்ளனர், பாதிரிகள். ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் நடத்தி வந்த எட்மண்டாஸ் எனும் பாதிரி, அங்குள்ள சிறுமிகளை நிர்வாணமாகப் படம் பிடித்து ரசிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறான். டப்ளின் நகரில் மக்னாமி எனும் பாதிரி -ற்றுக்கணக்கான சிறுவர்களை கட்டாயப்படுத்தி ஓரினச் சேர்க்கைக்கு ஆட்படுத்தி வந்துள்ளான்.

பாலியல் முறைகேடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்பு ஈடுபட்டு வந்த பல பாதிரிகள் இன்றைக்குத் திருச்சபையில் உயர்பதவி வகிப்பதால், இப்போது எழுந்திருக்கும் குற்றச்சாட்டுகளை மூடிமறைக்க திருச்சபை முயல்வதும் அம்பலமாகியுள்ளது. 70 வயதாகும் அயர்லாந்து கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் சீன் பிராடி, 35 ஆண்டுகளுக்கு முன் ஒரு பாதிரியைத் தப்புவிக்க, பாலியல் சித்திரவதை செய்ததாகக் குற்றம் சாட்டிய இரண்டு சிறுவர்களிடம் ‘‘வெளியே யாரிடமும் சொல்லக்கூடாது’’ என எழுதி வாங்கிக் கொண்டான். இதற்கு 15 ஆண்டுகளுக்குப் பின்னர், அயர்லாந்தின் மிக வக்கிரமான பாலியல் வெறியனாக அதே பாதிரி அம்பலமானான்.

அடுக்கடுக்காக இம்மாதிரிக் குற்றங்களை திருச்சபை மூடி மறைப்பது தொடரவே, உலகெங்கிலும் கத்தோலிக்கர்கள் கொதித்துப் போயுள்ளனர். மவுனமாக இருந்து இந்த விவகாரத்தை அமுக்கிவிடலாம் என முதலில் எண்ணிய போப் பெனடிக்ட், கத்தோலிக்கர்களின் போராட்டங்கள் பெருகுவதைக் கண்டவுடன் உருக்கமான மன்னிப்புக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார். அக்கடிதமோ அனைத்துத் தரப்பினரையும் சாந்தப்படுத்தியும், குற்றவாளிகள் மீது நடவடிக்கை எதனையும் அறிவிக்காமலும் விசயத்தைப் பூசிமெழுகும் வேலையைச் செய்துள்ளது.



போப் பெனடிக்ட், 1977-82 காலகட்டத்தில் ஜெர்மனியின் ம்யூனிச் நகரின் பேராயராக இருந்தார். அப்போது, சிறுவர்களைத் தனது வக்கிரத்துக்குப் பயன்படுத்திய பாதிரியார் பீட்டர் ஹல்லர்மேனை ம்யூனிச் சிற்கே இடம் மாற்றம் செய்து, சிறிது காலத்திலேயே மீண்டும் அவருக்குப் பழைய பொறுப்பையும், பெனடிக்ட்தான் கொடுத்தார். மீண்டும் தனது வக்கிரங்களைத் தொடர்ந்த அந்தப் பாதிரி பின்னர் மாட்டிக்கொண்டான். வின்ஸ்கான்சினைச் சேர்ந்த புனிதர் லாரன்ஸ் மர்பி, 1996 -இல் 200-க்கும் மேற்பட்ட காதுகேளாத சிறுவர்களிடம்



படிப்பகம்

www.padippakam.com

அத்துமீறல் செய்து மாட்டிக்கொண்டான். மர்பிக்கு வயதாகிவிட்டதையும், சம்பவங்கள் நடந்து பத்தாண்டுகளாகிவிட்டதையும் காரணம் காட்டி, அப்போது வாத்திகனில் சித்தாந்தத் துறை உயர்பதவியில் இருந்த இந்நாளைய போப் பெனடிக்டால் மன்னிக்கப் பட்டான்.

பாதிரிகளால் பாதிக்கப்பட்டு தப்பியோருக்கான அமைப்பினை நடத்திவரும் ஜான் பில்மையர், வக்கிர பாதிரி மர்பியின் படத்துடன் ரோமிலுள்ள பீட்டர் சதுக்கத்தில் திடீர் பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தினார். உடனே பாய்ந்து வந்த ரோம் நகர போலீசு அவரைக் கைது செய்து 2 மணி நேரத்துக்கும் மேலாகச் சிறையில் வைத்தது. ''குற்றவாளி பாதிரியை விட அதிகநேரம் நாங்கள்தான் சிறையில் இருந்துள்ளோம்'' என்று கூறிய பில்மையர், போலீசு-வாத்திகன்-அதிகார மையங்களின் வலைப்பின்னலைத் தோலுரித்துள்ளார்.

பெனடிக்ட் எழுதிய மன்னிப்புக் கடிதத்தால் சாந்தமடையாத அயர்லாந்து மக்கள், அந்நாட்டு தலைமை பிஷப் பதவி விலகக்கோரி அங்கே போராட்டங்களை நடத்தினர். இலண்டன் தலைமைத் தேவாலயம் முன்பாக, போப் பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தும் அளவிற்கு கத்தோலிக்கர்களின் ஆத்திரம் முற்றியுள்ளது.

பிற்போக்குப் பழைமையிலும், அதிதீவிர மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போன கத்தோலிக்க சபையின் ஒழுக்கக் கேடுகளுக்கு நீண்ட பாரம்பரியமே உள்ளது. பல பெண்களுடன் கள்ள உறவு வைத்திருந்த, ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்த போப்புகளின் பட்டியல் நீளமானது.

கிறித்துவ கன்னியாஸ்திரிகளிடம் நிலவும் ஓரினச் சேர்க்கையை வெளியுலகிற்கு தன் சுயசரிதை மூலம் வெளிப்படுத்திய கேரளாவைச் சேர்ந்த சகோதரி ஜெஸ்மிக்கு, திருச்சபை 'மன நோயாளி' பட்டம் கட்டியது.

**கடும் தண்டனைக்குரிய குற்றம் செய்திருக்கும் இந்த 'அருட் தந்தைகளை' போலீசும் நீதிமன்றமும் விசாரிக்க வாத்திகன் அனுமதிக்கவில்லை. வெகு தெளிவாக, சர்ச் விவகாரங்களை சிவில் நிர்வாக அமைப்புகளிடம் தெரிவிக்கக் கூடாது என்கிறார், போப்.**

அண்மையில் அமெரிக்காவில் சிறுமிகளிடம் வக்கிரம் செய்த தமிழகத்தைச் சேர்ந்த பாதிரி ஜோசப் ஜெயபால், ஊட்டியில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறான். பல ஆண்டுகளாக நடந்து வந்த இந்த விவகாரம் ஊடகங்களில் நாறத் தொடங்கியதும், பாதிரியை விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி 'கிறித்துவின்' ஆசிபெற்ற சபை கேட்டுக் கொண்டிருக்கிறது.

கடும் தண்டனைக்குரிய குற்றம் செய்திருக்கும் இந்த 'அருட் தந்தைகளை' போலீசு, நீதிமன்றம் விசாரிக்க வாத்திகன் அனுமதிக்கவில்லை. வெகு தெளிவாக, சர்ச் விவகாரங்களை சிவில் நிர்வாக அமைப்புகளிடம் தெரிவிக்கக் கூடாது என்கிறார், போப். அயர்லாந்து சர்ச்சுகளின் தலைவரோ, இந்த 'விவகாரத்தை' சிவில் நிர்வாக அமைப்புகளிடம் வெளியிடக் கூடாதென சிறுவர்களிடம் எழுதி வாங்கியும் வைத்துள்ளார். இந்தப் புனிதர்களின் அதிகார மையமும் ஆளும் வர்க்கமும் வைத்திருக்கும் நெருக்கமே இந்தத் திமிரை அவர்களுக்கு வழங்குகின்றன.




இப்போது போப்பிற்கு எதிராகக் கிளர்ந்திருக்கும் மக்களின் கோபம் மேலும் உயர்ந்து, மக்களால் திருச்சபை தண்டிக்கப்படாத வரை, மதமும் அரசியலும் பிரிக்கப்படாதவரை கத்தோலிக்க மதமும் பல ஜெயேந்திரன்களையும், சாயி பாபாக்களையும் நித்யானந்தன்களையும் உருவாக்கிக் கொண்டுதான் இருக்கும். வாத்திகனும் இதனைப் பூசி மெழுகிக் கொண்டுதான் இருக்கும்.

● அன்பு



படிப்பகம்

www.padippakam.com

# பன்னாட்டு மருந்து கம்பெனிகளின் வேட்டைக்காடாகிறது இந்தியா!

**கார்டாசில் என்ற தடுப்பூசி மருந்தைப் பரிசோதித்துப் பார்க்க பழங்குடியினச் சிறுமிகளை எலிகளாகப் பயன்படுத்துகிறது, இந்திய அரசு.**

இனி திரும்பி வரவே முடியாத தங்கள் மகள் சரிதாவை எண்ணி எண்ணி அழுது கொண்டிருக்கின்றனர், அவளின் பெற்றோரான நாகேஸ்வரா-வெங்கட்டம்மா தம்பதியினர். ஆந்திரப் பிரதேசத்தின் கம்மம் மாவட்டத்திலுள்ள லெச்சுமி நகரம் மாணவிகள் விடுதியில் தங்கிப் படித்து வந்த அந்த 13 வயது சிறுமி, கடந்த ஜனவரி 21 அன்று காலையில் அசைவற்ற நிலையில் தரையில் விழுந்து கிடந்ததைக் கண்ட அப்பெற்றோர், அருகிலுள்ள மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றனர். செல்லும் வழியில் கடுமையான வலிப்பு ஏற்பட்டு, சரிதா இறந்துவிட்டார்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 30-ஆம் நாளன்று பத்ராச்சலம் அருகே உள்ள யெர்ரகட்டு கிராமத்தில் சொடிசாயம்மா எனும் 13 வயது சிறுமியும் இதேபோல திடீரென வலிப்பு நோயால் இறந்துவிட்டார். கம்மம் மாவட்டத்தில் கடந்த ஓராண்டாக செயல்படுத்தப்பட்டு வரும் கருப்பைப் புற்றுநோய்த் தடுப்பூசித் திட்டமே இவர்களின் திடீர் மரணங்களுக்குக் காரணம். இருப்பினும், ஆந்திர மாநில காதாரத்துறை அமைச்சரான நாகேந்தர், தடுப்பூசி மருந்தினால் சாவுகள் நடக்கவில்லை என்று கூசாமல் புளுகுகிறார்.

ஒவ்வோராண்டும் இந்தியாவில் 1.3 கோடி பெண்களுக்குக் கருப்பை நுழைவாயில் பகுதியில் புற்று நோய் கண்டறியப்படுவதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தியாவில் இந்நோயால் 74 ஆயிரம் பேர் ஆண்டுதோறும் இறக்கின்றனர். பெண்களில் பலருக்கும் பரவலாக வரும் நோயான மார்பகப் புற்றுக்கு அடுத்ததாக அதிகளவில் தாக்கும் நோயாக இவ்வகைப் புற்று நோய் உள்ளது.

இந்நோய் பாலுறவு மூலம் தொற்றக்கூடிய ஹெச்.பி.வி. (Human Papilloma Virus) எனும் வைரஸால் உருவாவதால், பெண்கள் பருவமடையும் முன்னரே இந்த வைரசுக்கான தடுப்பூசியைப் போடுவது என்று திட்டமிட்டு, குஜராத்தின் வடோதரா மாவட்டத்தையும் ஆந்திரத்தின் கம்மம் மாவட்டத்தையும் தேர்ந்தெடுத்துள்ளனர். அங்கு 10 முதல் 14 வயது வரை உள்ள சிறுமிகளுக்கு கார்டாசில் எனும் தடுப்பு மருந்தைப் போட்டுள்ளனர்.

பாத் (PATH) எனப்படும் உலகில் மிகப்பெரிய சுகாதாரத் துறை சார்ந்த அமெரிக்கத் தன்னார்வ நிறுவனத்தின் உதவியுடன், சென்ற ஆண்டு ஜூலை முதல் புற்று நோய்த் தடுப்பூசித் திட்டத்தைச் செயல்படுத்திட இந்திய அரசும், குஜராத், ஆந்திர மாநில அரசுகளின் சுகாதாரத் துறைகளும் களத்தில் இறங்கின. கம்மம் மாவட்டத்தில் ஒரு தவணையில் ஏழை, பழங்குடியினச் சிறுமிகள் 14 ஆயிரம் பேர் வீதம், மூன்று தவணைகளாக இதுவரை 42,000 சிறுமிகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கம்மம் மாவட்டத்தில் பழங்குடி மாணவிகளுக்கான லெச்சுமிநகர் உறைவிடப் பள்ளி விடுதியில் தங்கிப் படித்து வந்த 278 மாணவிகளுக்கு இந்தத் தடுப்பூசி போடப்பட்டது. தடுப்பூசி போட்டுக்கொண்ட பழங்குடிச் சிறுமிகள் 3 பேர்கள், மருந்தின் பக்கவிளைவுக்குப் பலியாகியுள்ளனர். மிகவும் பின்தங்கிய மக்களிடையே இந்தச் 'சோதனை'யை நடத்திவரும் பாத் நிறுவனம், இத்தடுப்பூசி குறித்து மாணவிகளின் பெற்றோருக்கு தகவல் தரத் தேவையில்லை என பள்ளித் தலைமையாசிரியரிடமும், விடுதிக் கண்காணிப்பாளரிடமும் கூறியிருந்தது. இது, இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் தார்மீக நெறிமுறைக்கு எதிரானதாகும். கம்மம் பகுதியில் தடுப்பூசி போட்ட பின்னர் 120 மாணவிகளுக்கு வலிப்பு, ஒவ்வாமை, வயிற்றுப் போக்கு, மயக்கம் போன்றவை ஏற்பட்டிருக்கின்றன.



பரிசோதனை எலிகள்:
இளஞ்சிறுமிக்கு போடப்படும் கருப்பை புற்றுநோய்த் தடுப்பூசி.



படிப்பகம்




கார்டாசில்:
புற்றுநோய் மருந்தா?
உயிர்க்கொல்லி மருந்தா?

பாத் நிறுவனமோ இம்மருந்தின் பக்கவிளைவு மிக மிகக் குறைவானது என்கிறது. ஆனால், அமெரிக்கா சார்ந்த ஜூடிசியல் வாட்ச் மற்றும் வேர்ஸ் எனும் அமெரிக்க அரசின் அமைப்புகள் கார்டாசில் மருந்தின் பக்கவிளைவுகளாக இரத்தம் உறைதல், நோய் எதிர்ப்பு சீர்குலைவு, வலிப்பு மற்றும் ஒவ்வாமை ஆகியவற்றைப் பட்டியலிட்டுள்ளது.

கார்டாசில் தடுப்பூசியினால் அமெரிக்காவில் மட்டும் 2006-க்குப் பின்னர் 61 பேர் இறந்துள்ளனர். இதனை அமெரிக்க அரசின் அமைப்பான வேர்ஸ் ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளது. இங்கிலாந்திலும் இதுபோன்ற சாவு செப்டம்பர் 2009-இல் பதிவாகியுள்ளது. ஜெர்மனி, ஆஸ்திரியாவிலும் கார்டாசில் காரணமாக ஒவ்வாமை ஏற்பட்டு, திடீர் மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக ஐரோப்பிய மருந்து முகாமை குறிப்பிட்டுள்ளது. பேசுவது, நடப்பது, சுவாசிப்பது போன்ற செயல்களைப் புரியும் தசைகள் அனைத்தையும் இந்த மருந்து செயலிழக்க வைக்கும்; நோய் எதிர்ப்பு மண்டலத்தையே தலைகீழாக்கி விடும்; கணையத்தில் எரிச்சலை உருவாக்கும் என்று நோய்க்கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான அமெரிக்க மையம் எச்சரித்துள்ளது.

•••

இந்தளவிற்குப் பக்கவிளைவுகளை ஏற்படுத்தக் கூடிய கார்டாசில் மருந்தை ஆந்திராவில் சோதிக்க முயற்சிக்கக் காரணம் என்ன? கம்மம் பகுதியில் இந்த வகைப் புற்றுநோய் பரவலாக இருந்ததுதான், இங்குள்ள பழங்குடியினர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு காரணம், என்கிறது ஆந்திர அமைச்சரவை. ஆனால், ‘‘இது அப்பட்டமான பொய்’’ என்றும் ‘‘இதனை நிரூபிக்க எவ்விதமான ஆவண ஆதாரங்களும் கிடையாது’’ என்றும் பெண்கள் மற்றும் நல்வாழ்வுக்கான சாமா எனும் தன்னார்வக் குழுவும், 80-க்கும் மேற்பட்ட நல்வாழ்வுக் குழுமங்களும், மருத்துவர்களும் அரசின் காதாரத் துறைக்கு தங்களது அறிக்கையாகக் கொடுத்துள்ளனர்.

இத்திட்டத்தில் பணியாற்றும் மாவட்ட அலுவலரான டாக்டர் ஜெயகுமார், ‘‘எதற்காக இப்பகுதி இம்மருந்தின் சோதனைக் களமாக்கப்பட்டுள்ளது எனத் தெரியவில்லை. இப்பகுதியில் பெருமளவில் புற்றுநோய் வந்ததாக எந்தப் புள்ளிவிவரமும் இல்லை. இம்மருந்தின் விளைவுகளை அளவிட எவ்வித அளவுகோல்களும் இல்லை. பிறகு ஏன் இம்மருந்தினைச் சோதித்து நிர்வகிக்க வேண்டும் எனத் தெரியவில்லை’’ என்கிறார். குடும்ப நலத்துறை ஆணையாளர், ‘‘நாம் இதைச் செய்தாக வேண்டும்’’ என்று வலியுறுத்தியதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்மம் மாவட்டத்தை ஆய்வுக்காகத் தேர்வு செய்ததன் காரணம், அங்குதான் படிப்பறிவில்லாத, பின்தங்கிய ஏழை மக்கள் ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளனர். அவர்களிடம் இந்த மருந்தைப் பரிசோதித்தால் எதிர்ப்பு ஏதும் வராது என்ற காரணத்தால்தான் கம்மம் மாவட்டத்தை இவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர், என்கிறது சி.பி.எம்.-இன் மகளிர் அமைப்பு.

‘‘இவ்வகைப் புற்றுநோயே நடுத்தர வயதுப் பெண்மணிகளின் கருப்பையைத்தான் தாக்குகிறது; அவ்வாறிருக்க, பாலுறுப்புகள் வளர்ச்சியுற்றிராத சிறுமிகளிடம் ஏன் சோதிக்கிறார்கள்?’’ என வினவுகிறார், பத்ராச்சலம் பழங்குடியினர் மத்தியில் மருத்துவம் செய்துவரும் டாக்டர் பிரபாகர். ‘‘இம்மருந்து ஹெச்.பி.வி. வைரசின் வகைகளில் இரண்டை மட்டுமே கட்டுப்படுத்தும். ஆனால், புற்றுநோய்க்கு வேறு பல காரணிகள் இருப்பதால், அவற்றை எல்லாம் இம்மருந்தால் தடுக்க இயலாது. இம்மருந்தை எப்படியாவது சந்தைப்படுத்தும் நோக்கத்தில், கார்டிசாலின் திறன் குறித்த பல விசயங்களை வெளிப்படையாகப் பேச மறுக்கின்றனர்’’ என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மீளாத் துயரம்: ஏகாதிபத்திய மருந்துக் கம்பெனி நடத்திய சோதனையில் பலியான சொடி சாயம்மாவின் படத்துடன் அவரது தாய்.





படிப்பகம்

‘‘இந்தியாவிலுள்ள ஏழெட்டு வகை கருப்பைப் புற்றுநோய்கள் குறித்துப் போதுமான தகவல்கள் நம்மிடம் ஏதும் இல்லை. எனவே, எவ்வளவு தூரத்திற்கு இந்தத் தடுப்பு மருந்து ஒவ்வொரு தனிப்பட்ட நோயாளிகளுக்கும் பலனளிக்கும் என்பதையும் சொல்ல இயலாது’’ என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் தலைமை இயக்குநர் தெரிவித்துள்ளார். தற்போது சோதிக்கப்பட்டிருக்கும் மருந்து ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே வேலை செய்யும். அதன் பின்னர் அதற்கு பின்னூட்ட மருந்து எடுக்க வேண்டியிருக்குமா? எவ்வளவு இடைவெளியில் இதனை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்? பின்னூட்ட மருந்து, தடுப்பூசி மருந்தின் மீது எவ்வகையான விளைவுகளை உருவாக்கும்? இந்தத் தொடர் மருந்தூட்டத்திற்கு யார் செலவு செய்யப் போகிறார்கள்? - முதலான கேள்விகளுக்கெல்லாம் விடையில்லை. ஏற்கெனவே, திருவனந்தபுரம் பகுதியில் புற்றுநோயாளிகளுக்குத் தெரியாமல் சில புது மருந்துகளைச் செலுத்தி ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இப்போது கருப்பைப் புற்றுநோய்க்கும் ஆராய்ச்சி நடத்த இந்தியப் பழங்குடியினச் சிறுமிகள் சோதனைச்சாலை எலிகளாக்கப்பட்டிருக்கின்றனர்.

உலகளவில் கருப்பைப் புற்றுநோய்த் தடுப்பு மருந்துச் சந்தை 45 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலானது. அதில் 25 சதவீதத்துக்கும் மேல் இந்தியாவில் உள்ளதென்பதால், பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் வாயில் எச்சில் ஒழுக இந்தியா மீது படையெடுக்கும் ஆசையில் உள்ளன.

● கதிர்

# “மின்கட்டண உயர்வைத் திணிக்க கருத்துக் கேட்பு நாடகமாடாதே!”

## - புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் சார்பில் மின்கட்டண உயர்வு பற்றி பொதுமக்களின் கருத்து கேட்புக் கூட்டம் சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய தமிழகத்தின் 4 பெரிய நகரங்களில் நடைபெற்றது. திருச்சியில் 15.4.10 அன்று கூட்டம் நடைபெற்றபோது, மின் திருட்டு, மின் பற்றாக்குறை, மின்சார சிக்கனம் குறித்து விவாசாய சங்கப் பிரதிநிதிகளும் நுகர்வோர் அமைப்புகளும் பொதுமக்களும் இக்கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவித்தனர். ஆணையத்தின் தலைவர் கபிலன், இது அரசியல் கூட்டமல்ல என்றும் கூச்சல், குழப்பம், கலகம் செய்தால் போலீசார் அவர்களை வெளியேற்றுவார்கள் என்றும் எச்சரித்தார். அதற்கேற்ப அரங்கத்தினுள் எல்லா பக்கமும் துப்பாக்கி ஏந்திய போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். மார் 200 பேர் வீதம் பங்கேற்ற இக்கூட்டத்தில், ஒவ்வொருவரின் முகவரி பெற்று வீடியோ படம் எடுத்துப் பீதியூட்டினர். ஏற்கெனவே ஏற்பாடு செய்து அழைத்து வரப்பட்டவர்கள், பிரச்சினைகளைப் பேசாமல் திசைதிருப்பினர்.

தமிழ்நாடு மின்உபயோகிப்பாளர் பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த புஷ்பவனம் என்பவர், விவசாயிகளுக்குத் தரப்படும் இலவச மின்சாரத்தில் விதிமுறைகள் மீறப்படுவதாகவும், விவசாயிகள் மின்திருட்டில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டினார். இதை எதிர்த்து விவசாய சங்கப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்ற ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ,தொ.மு; அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும் கண்டனம் தெரிவித்து, அவரை மேடையை விட்டு இறங்கச் சொல்லி முழக்கமிட்டனர். ஆணையத் தலைவரோ அபாண்டமாக குற்றம்சாட்டியவரைக் கண்டிக்காமல், எதிர்ப்புக் குரல் கொடுத்தவர்களை மிரட்டியதோடு, போலீசாரை வைத்துக் கட்டாயமாக வெளியேற்றினார்.

அரங்கத்தின் வெளியே தள்ளப்பட்ட தோழர்கள், அங்கே பொதுமக்களிடம் கருத்துக் கணிப்பு என்ற பெயரில் நடக்கும் இந்தக் கேலிக்கூத்தை விளக்கி, அவர்களையும் அணிதிரட்டி திடீர் ஆர்ப்பாட்டம் செய்தனர். ‘‘தரகு முதலாளித்துவ - பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்குவதை நிறுத்து!, விவசாயிகளுக்குத் தடையின்றி மின்சாரம் இலவசமாக வழங்கு! கருத்துக் கணிப்பு என்ற பெயரில் நாடகமாடாதே!, மின் கட்டண உயர்வைத் திணிக்காதே!’’ என்ற முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அதிகார வர்க்கமும் போலீ ம் அரண்டுபோனது. மறுபுறம் கருத்துக் கணிப்பு கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, அங்கிருந்த இதர தோழர்கள் மின் பற்றாக்குறைக்கான உண்மையான காரணத்தை விளக்கியும், மாற்று கருத்து கூறுபவர்களை கட்டாயமாக வெளியேற்றதைக் கண்டித்தும், கட்டண உயர்வு பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் இந்த அமைப்புக்கு இல்லை என்பதையும் விளக்கிக் கருத்துரைத்தனர். கூட்டத்தில் பங்கேற்ற பொதுமக்களும் விவசாயிகளும் இதை உற்சாகத்துடன் வரவேற்று ஆதரித்தனர். இறுதியாகப் பேசிய தலைவர், தமக்கு முடிவெடுக்கும் அதிகாரம் இல்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டதோடு, இக்கருத்துக்களை அர க்குத் தெரிவிப்பதாகப் பம்மினார்.




— பு.ஜ.செய்தியாளர், திருச்சி.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



இந்திய அரசியல் சட்டம் என்பது வெற்றுக் காகிதமாக மாறி வருவது, வல்லரசுகளால் திணிக்கப்படும் உலகப் பொருளாதாரத்துக்கான அரசமைப்புச் சட்டமே உண்மையான சட்டமாக நடைமுறையில் இருப்பது, நிதி தாராளமயமாக்கம் மற்றும் மூலதனக் கணக்கு தாராளமயமாக்கத்தின் கீழ் பேரளவு பொருளாதாரக் கொள்கைகள் அனைத்தும் சர்வதேச நிதிநிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குச் சென்றிருப்பது, அரசமைப்பின் கட்டுமானங்களிலும் நடைமுறைகளிலும் முதலாளித்துவச் சந்தையின் விதிகள் புகுத்தப்பட்டு சந்தையின் விதிகளே ஜனநாயகத்தின் விதிகளாக மாற்றப்பட்டிருப்பது, மறுகாலனியாக்கத்திற்கு இசைவான முறையில் போலீசு, நீதித்துறை, நிர்வாகத்துறை உள்ளிட்ட அரசுக் கட்டுமானம் திருத்தியமைக்கப்படுவது, இத்தகைய கட்டமைப்பு மாற்றங்களின் மூலம், ஜனநாயகம் என்ற பெயரிலேயே பாசிசம் நிறுவனமயமாக்கப்படுவது ஆகியவற்றை பிளீனம் எடுத்துக் காட்டியது.

நாடாளுமன்ற சீரழிவின் விளைவாக அரசியல்வாதிகள் மீது மக்கள் கொண்டிருக்கும் அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு, ஆளும் வர்க்க சேவைக்கென்றே பயிற்றுவிக்கப்பட்டிருக்கும் அதிகாரவர்க்கத்தின் கைகளுக்கு முடிவெடுக்கும் அதிகாரங்களை மாற்றுவது, தொழில்முறை நிர்வாகிகள் என்ற பெயரில் அவர்களையே அரசியல் கட்சிகளின் தலைமையாக உயர்த்துவது, அறிவியல் பூர்வமான, நடுநிலையான முடிவுகளை வல்லுநர்கள்தான் எடுக்கமுடியும் என்ற பெயரில், சர்வதேச நிதிநிறுவனங்களின் கைப்பாவைகளான தொழில்முறை வல்லுநர் அமைப்புகளின் (Professional consultancy firms) முடிவுகளையே அறுதியானவையாக்குவது, அரசை வெட்டிச் சுருக்குவது என்ற பெயரில் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தை நேரடியாக அரசு அதிகாரத்தின் அங்கமாக்குவது, கீழ்நிலை அமைப்புகளுக்குத் தன்னாட்சி என்ற பெயரில் உள்ளூராட்சி அமைப்புகளை நேரடியாக உலக வங்கி கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவது, வேர்மட்ட ஜனநாயகம் என்ற பெயரில் தனியார்மயத் திட்டங்களைக் கீழ் மட்டத்தில் செயல்படுத்தும் ஐந்தாம்படையாகவும், அரசு அதிகாரத்தின் பங்காளியாகவும் தன்னார்வக் குழுக்களைச் சேர்த்துக் கொள்வது, இத்தகைய முறைசாரா அமைப்புகள் மூலம் மக்களின் எதிர்ப்பை வேர்மட்டத்தில் நிறுவனமயப்படுத்தி ஊழல்படுத்துவது, சுய உதவிக் குழுக்கள் போன்ற அமைப்புகள் மூலம் மக்களின் போராட்ட உணர்வைக் கருக்கி சுயமுன்னேற்ற சிந்தனையை விதைப்பது, 'இன்னொரு உலகம் சாத்தியமே!' என்ற முழக்கத்தின் கீழ் கம்யூனிச அரசியலை நோக்கி வரும் சக்திகளை சித்தாந்த ரீதியாக சீர்குலைப்பதுடன், ஏகாதிபத்திய எதிர்ப்பையும் நீர்த்துப் போகச் செய்வது என்பன உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் இந்தக் கட்டுமான மறுசீரமைப்பின் அங்கங்களாக இருப்பதை பிளீனம் சுட்டிக் காட்டியது.

பா.ஜ.க, காங்கிரசு முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரையிலான அனைத்துக் கட்சிகளாலும் ஒருமனதாக அமல்படுத்தப்படும் மறுகாலனியாக்கத்தின் கீழ் சிறந்த அரசாளுமை என்ற சர்வதேச நிதிமூலதனத்தின் முழக்கமே எல்லாக் கட்சிகளுக்கும் கொள்கை முழக்கமாக மாறியிருப்பதையும், மக்கள் நல முகமூடிகள் உதிர்ந்து, நாடாளுமன்றமே கோடீசுவரர்களின் மன்றமாக மாறி விட்டிருப்பதையும் சுட்டிக்காட்டிய பிளீனம், இந்தப் போலி ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்து வரும் மக்கள், புரட்சிப் பாதைக்கு சென்றுவிடாமல் தடுக்க, அவர்களை புதிய தாராளவாதக் கொள்கையின் சித்தாந்தத் தாக்குதலுக்கும், பண்பாட்டு சீரழிவு, சாதி-மதவெறி போன்றவற்றுக்கும் ஆளும் வர்க்கம் திட்டமிட்டே ஆளாக்குகிறது என்பதையும் சுட்டிக் காட்டியது. தேர்தல் தோல்விகளால் பார்ப்பன பாசிசம் தற்காலிகப் பின்னடைவுக்கு ஆளாகியுள்ள போதிலும், அது பலவீனமடைந்து விடவில்லை என்பதையும் பிளீனம் வலியுறுத்தியது.

தேசிய இனப் போராட்டங்கள் மற்றும் வர்க்கப் போராட்டங்களை பயங்கரவாதமாகவும், தேச முன்னேற்றத்தின் எதிரியாகவும் சித்தரித்து ஒடுக்கும் இந்திய அரசு, அமெரிக்க மேல்நிலை வல்லரசின் போர்ச்சக்கரத்தில் அதன் அடியாளாகத் தன்னைப் பிணைத்துக் கொண்டிருப்பதையும், இந்தியத் தரகு முதலாளித்துவத்தின் விரிவாதிக்க வேட்கையுடன் இது ஒன்றுபடுவதையும் பிளீனம் சுட்டிக் காட்டியது. இந்திய அரசின் இலங்கைத் தலையீடு, நேபாளத் தலையீடு ஆகியவை தெற்காசியப் பகுதியில் பிற்போக்கின் கோட்டையாக இந்திய அரசு மாறியிருப்பதைக் காட்டுவதையும், இதற்கெதிராக இப்பிராந்தியத்தின் பாட்டாளி வர்க்கம் ஒன்றுபட வேண்டியதன் தேவையையும் பிளீனம் வலியுறுத்தியது.

மாவோயிஸ்டு அமைப்பினருக்கு எதிராக இந்திய அரசு அறிவித்திருக்கும் ஆபரேசன் கிரீன் ஹன்ட் நடவடிக்கையின் நோக்கம், தண்டகாரண்யா பகுதியை பன்னாட்டு கனிமவள நிறுவனங்களுக்குத் தாரை வார்ப்பது மட்டுமின்றி, மறுகாலனியாக்கத்தை எதிர்த்து நிற்கும் மாற்று அரசியல் சக்தியாக நக்சல்பாரி இயக்கம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வருவதைத் தடுப்பதே அதன் முதன்மையான நோக்கம் என்பதையும் அம்பலப்படுத்தியது. முதற்பெரும் உள்நாட்டு அபாயமாக எதிரிகளால் அடையாளம் காணப்பட்டிருக்கும் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள், ஒன்றுபட்ட கட்சியாக ஐக்கியப்பட வேண்டியதன் தேவையையும் பிளீனம் வலியுறுத்தியது.

சர்வதேசிய - உள்நாட்டு நிலைமைகளின் மீதான விவாதத்துக்குப் பின், அமைப்பு நிலை குறித்த பரிசீலனை, விமரிசன, சுயவிமரிசனக் கண்ணோட்டத்துடன் நிகழ்த்தப்பட்டது. ஜனநாயகபூர்வமாகவும், தோழமை உணர்வோடும் நடைபெற்ற இவ்விவாதங்களுக்குப் பின், புதிய மாநில அமைப்புக் கமிட்டியும், செயலரும் ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். கட்சியை விரிவாகவும், விரைவாகவும் கட்டியமைக்கவும், அதிகரித்துவரும் மறுகாலனியாக்கத் தாக்குதலுக்கு எதிரான மக்கள் போராட்டங்களைத் தீவிரப்படுத்தவும் பிரதிநிதிகள் உறுதியேற்றனர். ஐந்து நாள் நிகழ்ச்சிகள் சர்வதேசிய கீதத்துடன் நிறைவுற்றன.

29.04.2010

இவண்,
மாநில அமைப்புக் கமிட்டி,
இந்தியப் பொதுவுடைமைக் கட்சி
(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்),
தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

**PUTHIYA JANANAYAGAM** (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: **42648/85**
Regd. No: **TN/CC(S)Dn/190/09-11** Licenced to Post without pre-payment WPP No: **TN/PMG/CCR/WPP-562/09-11**

# தொழிலாளர் உரிமைகளை நசுக்கும் முதலாளித்துவ பயங்கரவாதத்தை வீழ்த்துவோம்! மறுகாலனியாதிக்கத்தை முறியடிப்போம்!

**ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு.,**
**ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து**
**மே நாளன்று புதுச்சேரியில் நடத்தத் தீர்மானித்திருந்த**
**பேரணி-பொதுக்கூட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து**
**புதுச்சேரி பேருந்து நிலையம் அருகே இவ்வமைப்புகள்**
**மே-1, 2010 அன்று மறியல் போராட்டத்தை நடத்தின.**

# தடையைத் தகர்த்த மே நாள் போராட்டம்!










படிப்பகம்